Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 191

ஞாயிற்றுக்கிழமை
05 ஜூன் 2022

வைகாசி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=

## லாப்ஸ் காஸ் நாளை லிட்ரோ செவ்வாய்

### சந்தைக்கு விநியோகம்

கொழும்பு, ஜூன் 5
நாளை முதல் சந்தைக்கு லாப்ஸ் எரிவாயு 15

## கட்டுப்பாட்டையிழந்த பாரவூர்தி மோதியதில் இளைஞன் சாவு!

### 3 நாள்களில் 8 உயிரிழப்புக்கள்

வவுனியா, ஜூன் 5
தாண்டிக்குளத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததோடு மற்றுமொருவர் படு காயமடைந்துள்ளார்.
மதவாச்சியைச் சேர்ந்த அப்புகாமி சிரான் சிரந்த (வயது - 25) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். 15



## இலங்கைக்கு தமிழக உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும்

### இலங்கைத் தூதுவர் மிலிந்தவிடம் முதலமைச்சர் உறுதி

### ஸ்டாலினை இலங்கைக்கு வருமாறு அழைப்பு

சென்னை, ஜூன் 5
இலங்கையின் தற்போதைய நிலை குறித்து தான் கவலையடைவதாகவும், இலங்கை மக்களுக்கு அவசியமான அத்தியாவசியப் பொருள்களைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொடவிடம் உறுதியளித்துள்ளார். 15

## வரி அதிகரிப்பால் பட்டினிச் சாவுதான்

### கடன் நச்சு வட்டத்துக்குள் சுழலப்போகின்றது இலங்கை

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ள வரி அதிகரிப்பானது, மக்களை பட்டினிச் சாவுக்குத்தான் கொண்டு செல்லும் என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை பேராசிரியர் எஸ்.விஜேசந்திரன் தெரிவித்தார். 15



தொடரும் அவலச் சாவுகள்!

## நீர்ப்பாசனக் கால்வாயில் வீழ்ந்து ஒன்றரை வயதுச் சிறுவன் சாவு!

கிளிநொச்சியில் சோகம் பக்.15







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 191

ஞாயிற்றுக்கிழமை
05 ஜூன் 2022

வைகாசி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053


# இலங்கை - ரஷ்யா பகை உக்கிரம்!

## இலங்கைத் தூதுவரை அழைத்து கண்டனம்

## விமான சேவைகள் நிறுத்தம்

## பல தளங்களிலும் எதிரொலிக்கும் பதிலடி

கொழும்பு, ஜூன் 5

'விமானத் தடுப்பு' விவகாரமானது கொழும்புக்கும், மொஸ்கோவுக்கும் இடையே இராஜதந்திர முறுகலை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைத் தூதுவரை நேரில் அழைத்து ரஷ்யா தமது அதிருப்தியை வெளியிடும் அளவுக்கு இந்தப்பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது. அத்துடன், ஏரோபிளட் நிறுவனம் கொழும்புக்கான தமது விமான சேவையை இடைநிறுத்தியுள்ளதால் சுற்றுலாத்துறை, வர்த்தகம் உள்ளிட்ட விடயங்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என பொருளாதார நிபுணர்களும், இராஜதந்திரிகளும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். 14



## 208 கிலோ கேரளக் கஞ்சா கிளிநொச்சியில் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 5

கிளிநொச்சி- விவேகானந்தநகரில்வீடொன்றை நேற்றுமுன்தினம்மாலை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புச் சோதனையின்போது சொகுசு வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 208 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. 14

## சுமந்திரன் எம்.பியின் வீட்டுக்கு அருகில் சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 5

வெள்ளவத்தையில் சிப்பாயொருவர் தவறானமுடிவுஎடுத்துதுப்பாக்கியால்தன்னைத் தானே சுட்டு உயிரிழந்துள்ளார். 14

இலங்கை - ஆஸி. ரி - 20

## ரிக்கெற்றுக்கள் விற்றுத் தீர்ந்தன

கொழும்பு, ஜூன் 5

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது மற்றும் இரண்டாவது ரி - 20 கிரிக்கெட் 15

## ஆசிரியர்களுக்கும் சுழற்சிமுறை வழங்குக!

கல்வி அமைச்சிடம் கோரிக்கை

ஆசிரியர்களை வாரத்தின் 5 நாள்களும் பாடசாலைகளுக்கு அழைப்பதெனில் அவர்களின் போக்குவரத்து செலவினத்தில்அரைப்பங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் ஏனைய திணைக்களங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகளுக்கு ஒத்ததாக பாடசாலைகளை சுழற்சி முறையில் இயக்குவதே சிறந்த வழியாகும். ஆசிரி 14

## தொடர் திருட்டு: 3 இளைஞர்கள் நேற்றுக் கைது

வவுனியா, ஜூன் 5

வவுனியாவில் 9 இடங்களில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச்சம்பவங்கள் தொடர்பில் மூன்று இளைஞர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 15

## 'ஒன்றானால் எழுவோம் பிரிந்தால் வீழ்வோம்!'

### கோத்தா - ரணில் பதவி விலகக் கோரி போராட்டம்

கொழும்பு, ஜூன் 5

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பதவி விலக வேண்டுமென்று வலியுறுத்தி கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 14

## நேற்றும் சூடு ஒருவர் சாவு!

கொழும்பு, ஜூன் 5

அஹங்கம பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் 27 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த 48 மணி நேரத்தில் துப் 14


Study Abroad After A/L

STUDENTS VISA

United Kingdom
No need IELTS

6 MONTH STUDENT VISA
Only Age 18-22
O/L Pass

America
Must IELTS

Canada
6.5 IELTS

Cyprus
Only A/L Pass

Serbia

WE ARRANGE BANK BALANCE AND PART TIME WORK

Get your Work Permit in ABROAD

WORK PERMIT

POLAND Work Permit
General Worker
Skill Worker

8 hrs work with overtime
Visa Arrange 2 month

We Have
Malta and Lativia Work Permit

Japan Work Permit
Work Permit 1 - 2 Year

VISIT VISA
Japan Visit Visa
Visa Arrange within Three weeks
Three months visit visa with a sponsor

ROYAL MILE COLLEGE
Choose your CAREER PATH

CONTACT US
077 822 3520
075 822 3523
royalmilecollege@gmail.com
2nd Floor, HSBC Building, Duplication Road, Bambalapitiya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DIAMOND

முழு ஆடைப் பால்மா

டயமண்ட் முழு ஆடைப் பால்மா நியூசிலாந்தில் இருந்து மட்டுமே பெறப்படுகிறது, அங்கு பசுக்கள் சுத்தமான மேய்ச்சல் நிலங்களிலும், காற்றிலும், பசுமையான புல் உணவளிக்கப்படுகின்றன. டயமண்ட் முழு ஆடைப் பால்மா கெட்டியாகவும், சுவையாகவும் சிக்கனமாகவும் இருக்கும்.

டயமண்ட் ஃபுல் க்ரீம் மில்க் பவுடர் ஆனது Diamond Best Food ஆல் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது, இது கடந்த 60 வருடங்களாக இலங்கையில் உள்ள குடும்பங்களின் நம்பிக்கையை பேணிப் பாதுகாத்து வருகின்றது.




# பொன். சிவகுமாரனின் நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 5

தியாகி பொன். சிவகுமாரனின் 48 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் உரும்பிராயில் உள்ள நினைவிடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அவைத்தீர்மானத்தின் பிரகாரம், பிரதேச சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அஞ்சலி நிகழ்வில் ஈகச்சுடரினை பொன். சிவகுமாரனின் சகோதரி ஏற்றிவைக்கவுள்ளதுடன் அகவணக்கம், மலரஞ்சலி என்பனவும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த நிகழ்வுகளின் தொடர்ச்சியாக



காலத்தில் அவருடன் செயற்பட்ட அரசியல் தலைவர்கள், நண்பர்களால் அஞ்சலி உரைகளும் நிகழ்த்தப்படவுள்

# நாட்டை சீர்குலைத்தனர் என மஹிந்த, பஸில் மீது வழக்கு

கொழும்பு, ஜூன் 5

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தனர் என்று குற்றம் சுமத்தி முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் உள்ளிட்ட பேராசிரியர்கள் மூவர் அடங்கிய குழுவினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவி அமைப்புக்களும், கட்சியின் சட்டத்தரணிகளும் இணைந்து இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், திறைசேரியின் முன்னாள் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர உள்ளிட்ட சிலர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பணவீக்க அதிகரிப்பு, அத்தியாவசிய பொருள்கள் தட்டுப்பாடு, அந்நிய செலாவணி பற்றாக்குறை என பல்வேறு விடயங்களின் அடிப்படையில் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்ட சிலர் வேண்டுமென்றே மத்திய வங்கிக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# புங்குடுதீவுக்கான மின் விநியோகம்; திருத்தப்பணிகள் இன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 5

வேலணை - புங்குடுதீவு பாலத்தினூடாக புங்குடு தீவுப் பிரதேசத்துக்குக் கடல் வழியாகக் கொண்டு செல்லப்படும் உயர் அழுத்த மின்மார்க்க வடங்கள் மற்றும் மின் கம்பங்களைப் பராமரிக்கும் பணிகள் இன்று முதல் அடுத்த சில தினங்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ளன.

கடல்நீர் வற்றும் காலங்களிலேயே பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதால் நாளை தொடக்கம் எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கட்டம் கட்டமாக இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு இலங்கை மின்சாரசபை தீர்மானித்துள்ளது. எனவே குறித்த காலப் பகுதியில் வேலணை - புங்குடுதீவு பாலத்தினூடாகப் பயணிப்போருக்கு சில பிரச்சினைகள், போக்குவரத்துத் தாமதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று இலங்கை மின்சார சபையின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நயினாதீவு திருவிழாக் காலத்தில் இந்தப் பணிகள் இடம்பெற மாட்டாது என்றும் குறித்த திருவிழாப் போக்கு வரத்தில் எவ்வித இடையூறும் ஏற்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)






# மருத்துவர் மீது தாக்குதல்; 8 பேருக்கு விளக்கமறியல்

கொடிகாமம், ஜூன் 5

கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்குள் புகுந்து மருத்துவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 8 பேரும் எதிர்வரும் 17ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மருத்துவமனைக்குள் புகுந்த இளைஞர் குழு, தாத்தாவை சிகிச்சைக்கு அழைத்துச் சென்ற யுவதி ஒருவரிடம் மருத்துவர் தொலைபேசி இலக்கத்தை கேட்டார் எனத் தெரிவித்து அவர் மீது தாக்குதல் நடத்தியது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் 8 இளைஞர்களை கைது செய்தனர். அவர்களை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-159)

# யாழ்ப்பாணக் கல்லூரியில் மோசடிகளா? பழைய மாணவர்கள் நேற்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

'யாழ்ப்பாணக் கல்லூரியைப் பாதுகாப்போம்' என்ற தொனிப் பொருளில் கல்லூரியின் பழைய மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் இணைந்து கல்லூரியின் முதன்மை வாயிலில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையில் இடம்பெறும் மோசமான யாப்பு மீறல்களைக் கண்டிக்கும் வகையிலும், கல்லூரியின் நிர்வாகத்தில் ஆளுநர் சபையின் தலைவர் பேராயர் டானியல் தியாகராஜா மேற்கொண்டு வரும் முறையற்ற தலையீடுகளை எதிர்க்கும் வகையிலும், யாழ்ப்பாணக் கல்லூரி நிதிகளின் தர்மகர்த்தா சபைக்கு எதிராக ஆளுநர் சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-26)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்டக் கம்பனிகளின் வெற்றுக்காணியில் விவசாயம்

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய பணிப்பு



**கொழும்பு, ஜூன் 5**

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைச் சமாளிக்கும் விதமாக, பெருந்தோட்டக் கம்பனிகளின் வெற்றுக்காணிகளை இனங்கண்டு, உரிய பொறிமுறையின் கீழ் அங்கு விவசாயம் மேற்கொள்வதற்கு விரைந்து நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தரவிட்டார்.**

உணவு நெருக்கீட்டைச் சமாளிப்பதற்காக நகர்ப்புறவிவசாயம், வீட்டுத்தோட்டம் ஆகிய நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் திட்டங்களுக்கு மேலதிகமாகவே மேற்படி பெருந்தோட்டக் காணிகளை இனங்கண்டு அவற்றில் விவசாயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி உத்தரவை ஜனாதிபதி விடுத்தார். பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமாக 9 ஆயிரம் ஹெக்ரேயருக்கும் அதிகமான நிலப்பரப்பு உள்ளது. அந்த நிலங்கள் உடனடியாக விவசாய நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அந்த நிலங்களில் பயிரிடுவதற்கு ஏற்ற பயிர்களை தேர்ந்தெடுத்து உரிய வழிகாட்டலின் கீழ் செய்கையாளர்களுக்கு வழங்குங்கள் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம)



## சுகாதார அமைச்சிடம் மருந்துகள் அன்பளிப்பு

கொழும்பு, ஜூன் 5

இலங்கைக்கான ஆசிய பசுபிக் பிராந்திய இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பின் ஏற்பாட்டில், ஏச்.எஸ்.பி.சி. வங்கியின் அனுசரணையில் இடர் முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து சுமார் 10 மில்லியன் பெறுமதியான மருந்துகள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கடுமையாக நிலவும் மருந்துப்பற்றாக்குறையை கணிசமான அளவு நிவர்த்திசெய்யும் வகையில் சுகாதார அமைச்சால் பட்டியலிடப்பட்ட முக்கியமான மருந்துகளே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு ஆசிய பசுபிக் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அமைப்பினரின் அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இந்த மருந்துகள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் இராஜாங்கச் செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க, ஏச்.எஸ்.பி.சி. வங்கியின் பதில் நிறைவேற்று அதிகாரி கெலும் எதிரிசிங்க, இலங்கைக்கான இடர் முகாமைத்துவ நிலைய இயக்குநர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க, பொது சுகாதார சேவைகளின் பிரதிப்பணிப்பாளரும், சுகாதார அமைச்சின் தொடர்பாடல் பணிப்பாளருமாகிய மருத்துவர் ஹேமந்த ஹேரத், பிரதமர் செயலகம் சார்பாக பாலித்த விக்கிரமகே, ஏச்.எஸ்.பி.சி. வங்கியின் கூட்டுறவு நிலைத்தன்மை முகாமையாளர் திலினி பெர்னாந்து, இலங்கைக்கான ஆசிய பசுபிக் பிராந்திய இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பு இயக்குநர் பிர்சான் ஹசிம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம)

## மழை தொடரும்

கொழும்பு, ஜூன் 5

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

மன்னாரிலிருந்து புத்தளம் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்கவேண்டும் - என்றுள்ளது. (ஏ-இ)



## கதிர்காமத்துக்கான பாதயாத்திரை செல்வச்சந்நிதியில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமக்கந்தன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு, அடியவர்களின் பாதயாத்திரை தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து நேற்று ஆரம்பமானது.

கதிர்காமக்கந்தன் ஆலய உற்சவத்துக்கு, செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து முருகனின் வேலை எடுத்துச்சென்று பாதயாத்திரை மேற்கொண்டு கதிர்காமக்கந்தனை பக்தர்கள் வழிபடுவது வழமை.

இதற்கமைய கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் நேற்றுக்காலை பாதயாத்திரை ஆரம்பமாகியது.

நேற்று ஆரம்பமாகிய பாதயாத்திரை பருத்தித்துறையை சென்றடைந்து பின்னர் ஏ-9 வீதியூடாக கிளிநொச்சியை சென்றடைந்து அதன்பின்னர் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தில் கலந்துகொண்ட பின் கதிர்காமத்தை நோக்கிச் செல்லவுள்ளது. (ம-14,26,20)



## தமிழக நிவாரணப் பொதிகள் கண்டாவளையில் வழங்கல்

கிளிநொச்சி, ஜூன் 5

தமிழகத்தால் வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் நேற்றுப் பகிரப்பட்டன.

இதற்கமைய புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் உள்ள மக்களுக்கு, கிராம அலுவலர் ஊடாக குறித்த பொதிகள் வழங்கப்பட்டன. (ம-14,113)

## நாட்டிலுள்ள அத்தனைபேரும் விவசாயத்தில் ஈடுபடவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



கொழும்பு, ஜூன் 5

நாட்டின் உணவு நெருக்கடியை சமாளிப்பதற்காக, இலங்கையிலுள்ள அத்தனை பேரும் தம்மாலான விவசாய நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

மேல்மாகாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாஸ இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

நாட்டில் இன்று உணவுப் பிரச்சினை உருவாகியுள்ளது. நாட்டில் உள்ள அத்தனை பேரும் விவசாய நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அழைக்கின்றது. ஒவ்வொருவரும் விவசாயத்துறைக்கு தன்னாலான பங்களிப்பை வழங்கினாலேயே இந்தப் பின்னடைவில் இருந்து மீளமுடியும் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## டொலருமில்லை, ரூபாவுமில்லை!

நாட்டில் உணவுப் பொருள்கள், எரிவாயு, எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து மின்சாரம், தொலைபேசிக் கட்டணங்களும் உயரவுள்ளன. எரிபொருள் விலை உயர்வை அடுத்து உச்சம் தொட்டிருக்கும் விலையேற்றம், மின்சாரக் கட்டண உயர்வால் இன்னும் உயரும் என்பதில் ஐயமில்லை.ஏதேனும் ஒன்றின் விலையுயர்வுத் தாக்கம் இன்னொரு பொருளிலோ அல்லது உற்பத்தியிலோ தாக்கம் செலுத்துவதால், சங்கிலித் தொடராக சுற்றிச் சுற்றி விலைகளின் உயர்வு வட்டம் இன்னும் கடுகதியில் சுழலப்போகின்றது.

கடந்த 2021 ஆண்டின் பிற்பகுதியிலேயே தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கை கடும் நெருக்கடியை எதிர்கொள்ளும் என்று எதிர்வு கூறியிருந்தார். அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் அதைப் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்வு கூறல் சரியாகவே நடந்தது.

ஆரம்பத்தில் டொலர் பற்றாக்குறையால் நெருக்கடிகளைச் சந்தித்திருந்த நாட்டில், இப்போது ரூபாவும் கையிருப்பில் இல்லை என்பதைச் சாதாரணமாகக் கடந்துவிட முடியாது. அரசாங்க செலவினங்களுக்குக் கூட நாணயம் அச்சடிக்கும் நிலைமை என்பது, ஏறத்தாழ நாடு திவாலாகி விட்டது அல்லது திவாலாகும் எல்லைக்கு வந்துவிட்டது என்பதையே சொல்லி நிற்கின்றது.

நாளாந்த வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாது மக்கள் அந்தரிக்கும் நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இப்போது அடிக்கடி ஓர் எதிர்வுகூறலைக் கூறிக் கொண்டிருக்கிறார். நாடு இப்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி நிலைமை ஆரம்ப கட்டமே என்றும், நிலைமை இன்னும் மோசமாகும் என்றும் கூறியுள்ள ரணில் விக்கிரமசிங்க, மக்கள் ஒருவேளை உணவை உண்ணும் நிலைமை கூட ஏற்படலாம் என்று எதிர்வுகூறி மக்களின் வயிற்றில் புளியைக் கரைக்கத் தொடங்கியுள்ளார் . நாடு எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளுக்கு சில மாதங்களில் தீர்வை எட்டிவிடலாம் என்று அரசியல்வாதிகள் கூறிக்கொண்டிருந்தாலும், நிலைமை அவ்வாறு இல்லை என்பதே உண்மை. வெளிநாட்டுக் கடன்கள் மூலம் நெருக்கடி நிலைமையைத் தணிக்கலாம் என்றாலும், அது தீர்வாக இருக்கப்போவதில்லை. தற்போதுள்ள விலைவாசி ஏற்றமும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் இப்போதைக்கு தணிந்துவிடப் போவதுமில்லை.

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டு இத்தனை காலம் பயணித்த முட்டாள்தனமான பாதையில் இருந்து விலகி புதிய பாதையில் பயணித்தால் மட்டுமே இலங்கையால் இந்தப் புதைகுழியில் இருந்து மீள முடியும். இந்த நெருக்கடி நிலைமையிலும் அதிகாரத்துக்காக மோதிக் கொண்டிருப்பவர்களும் பதவிகளைக் கட்டி அழுதபடி இருப்பவர்களுமே ஆட்சியில் இருப்பதால் இலங்கை உடனடியாக மீள்வதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்வுகூறல்கள் நடந்தால் பாதிக்கப்படப்போவது சாதாரண மக்களே. பட்டினியாலும் அதனால் எழும் சமூகப் பிரச்சினைகளையும் நேரடியாக எதிர்கொள்ளப் போவதும் அவர்களே. அரசியல்வாதிகளுக்கு எப்போதும் போல சுகபோகங்களும், சலுகைகளும் கிடைத்துக் கொண்டிருக்க, சாதாரண மக்கள் தான் ஒருநேர உணவுக்குக் கூட வழியற்று அலையப் போகின்றார்கள். எனவே அரசியல்வாதிகளின் பேச்சுக்களையும், வாய் ஜாலங்களையும் நம்பிக்கொண்டிருக்காது இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு மக்கள் இப்போதே தயாராக வேண்டும். இயலுமானவரையில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மக்களுக்கு துறைசார்ந்தவர்கள் உந்துதல் அளிக்க வேண்டும். இந்த நெருக்கடி நிலைமையை எதிர்கொள்வதற்கான வழிகாட்டல்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், ரணில் விக்கிரமசிங்க அஞ்சுவது போன்ற நிலைமை ஏற்பட்டால், இப்போதுள்ள சமூகக் கட்டமைப்பு முற்றாகக் குலைவதோடு, நாடே சுடுகாடாகிவிடும். எல்லாமே இனி எங்களின் கையில் தான்!

### நாளொரு நல்வார்த்தை

"எங்கு உண்மையை வெளிச்சத்துக்குக்கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகிறதோ அங்கே இறுதியில் உண்மை வெல்லும்."

- ஜோர்ஜ் வொஷிங்டன்



# விவசாய நெருக்கடிக்கு ஆறு மாதங்களில் தீர்வு

## ஐ.நா. பிரதிநிதிகளிடம் பிரதமர் ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 5**

**நகர்ப்புற விவசாயத்தை மேம்படுத்தி, வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தையும் உரியவாறு நடைமுறைப்படுத்தினால் ஆறு மாதங்களில் விவசாய நெருக்கடியைப் போக்க முடியும் என்று பிரதமர் ரணில் தெரிவித்தார்.**



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி விமலேந்திர ஷரன் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதி பிரதிநிதி மலின் ஹெர்விக் ஆகியோருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே பிரதமர் ரணில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:-

உணவுப் பற்றாக்குறை அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு, வேளாண்மைத்துறை அதிகாரிகளால் உணவுப் பாதுகாப்புத் திட்டம் தொகுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் அடுத்த மாதம் வெளியிடப்பட உள்ளது. விவசாயத்துறை தற்போது எதிர்நோக்கும் மிகப் பெரிய பிரச்சினை உரம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடாகும். நன்கொடையாளர்கள் சிலர் நாட்டுக்கு உதவ முன்வந்துள்ளனர் - என்றார்.

அதேநேரம், நகர்ப்புற விவசாயத் திட்டம் மேலும் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டால் அதிக நிதியுதவி வழங்கப்படும் என அதிகாரிகளால் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

# மோசமான நிலைமை இனிமேல்தான்!

## பிரதமர் ரணில் முன்னுக்குப்பின் முரணான கருத்து

கொழும்பு, ஜூன் 5

நாடு இனி வரும் காலங்களிலேயே மோசமான நிலையை எதிர்நோக்கவுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரும்போகம் மற்றும் சிறுபோகத்துக்குப் போதுமான உரம் காணப்படவில்லை. எதிர்வரும் பெரும்போகத்துக்கான உரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு உரம் கிடைக்கப்பெற்றால் எதிர்வரும் ஆண்டின் பெப்ரவரி மாதம் வரை சமாளிக்கக் கூடியதாகவிருக்கும். சுயமாக இலங்கையால் இந்த ஆண்டை முழுமையாகக் கடக்க முடியாது. நாட்டுக்கான உணவுப் பொருள்கள் விநியோக நடவடிக்கைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதம் வரை போதுமானதாக இருக்கும் - என்றார்.

அதேநேரம் ஐ.நா. பிரதிநிதிகளிடம் இன்னும் ஆறு மாதங்களில் இலங்கை விவசாய நெருக்கடியில் இருந்து மீண்டுவிடும் என்று தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-இ)

நாளை 06.06.2022 திங்கட்கிழமை வைகாசி 23
சுபநேரம் : 11.52 - 01.22
ராகுகாலம்: 07.22 - 08.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நாளை உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜுன் 5

**உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்தல் மற்றும் பொதி செய்தல் ஆகிய துறைகளில் ஈடுபடும் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்கள் ஆகியோர்களுடனான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மானிப்பாயிலுள்ள யாழ். வணிகர் கழகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.**

இதற்கமைய அரிசிமா, மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும், உள்ளூர் உற்பத்திகளைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது தொடர்பாகவும் இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. எனவே இந்தத் துறைகள் சார்ந்த அனைவரையும் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களையும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

(ம-14)

# பிரான்ஸில் 51 பேருக்கு குரங்கு அம்மை நோய்

பாரிஸ், ஜுன் 5


பிரான்ஸில் 51 பேருக்கு குரங்கு அம்மை நோய் உறுதிசெய்யப்பட்டுள்ளது என பிரான்ஸ் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக பிரான்ஸ் சுகாதார அமைப்பு கூறுகையில், இதுபோன்ற நோய்த்தொற்றை எதிர்பார்க்க வில்லை. எனினும் நாட்டின் போதுமான தடுப்பூசி இருப்பு உள்ளது.

பாதிப்பட்டோருடன் தொடர்பில் உள்ளோர் அனைவருக்கும் பிரான்ஸ் அரசு தடுப்பூசி போடுமாறு பரிந்துரைத்துள்ளது எனத் தெரிவித்தது.

(ச-இ)

# பெரியமடு கிராமத்தில் பயிர்கள் அறுவடை

மன்னார், ஜுன் 5



மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பெரிய மடு கிராமத்தில் சமுர்த்தி உதவித் திட்டத்தின் மூலமாகவும் சுயஉழைப்பின் மூலமாகவும் செய்கை பண்ணப்பட்ட பழ வகைகள் மற்றும் மரக்கறி வகைகள் நேற்று அறுவடை செய்யப்பட்டன.

இதன்போது பப்பாசிப்பழம், பலாப்பழம் மற்றும் கத்திரி, மிளகாய் ஆகியவற்றின் அறுவடைகளை மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஆரம்பித்து வைத்தார். அறுவடையின் பின்னர் ஆறு மாதத்தில் பயன்தரக் கூடிய மரவள்ளிச் செடிகளும் நடுகை செய்யப்பட்டன.

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி உதவி ஆணையாளர், பிரதேச செயலர், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ம-14,213)




# முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம், ஜுன் 5

மாதகல் நற்குண முன்னேற்ற அமைப்பு முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நுணசை மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் தே. மகேந்திரன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் கு.குகானந்தன், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி விஜயரூபன் தயாளினி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-159)

**திருமண சேவை**

உள்நாடு வெளிநாடு மற்றும் அரச, தனியார் உத்தியோக மணமக்களை தேர்ந்தெடுக்க உடன் தொடர்புக்கு

Whatsapp: 076 112 4145
TP: 077 302 0874

**இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்**

பிரிவு 39

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singala
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling

காலம்:- 3 மாதங்கள் சான்றிதழ் வழங்கப்படும்

- Diploma in Law (pre-law-degree)-1 Year

ஆரம்பம் : 11,12-06-2022, 10.00 AM

குறிப்பு : இலவச வகுப்புகளில் இணையும் மாணவர்கள் NIC பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும்
க.பொ.த(சா/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் இணைய முடியும்.

IPS திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 434 0229
076 685 2529

## மரண அறிவித்தல்

பிறப்பு 05.04.1949 **திருமதி தில்லைநாதன் கமலாம்பிகை** இறப்பு 04.06.2022



கச்சாய் வீதி, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாதன் கமலாம்பிகை அவர்கள் நேற்று (04.06.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகாம்பிகை அம்மாள் மற்றும் விமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தில்லைநாதன் அவர்களின் அன்பு மனைவியும், தாரகா, சிந்துஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், விபூஷன் மற்றும் முகுந்தன் ஆகியோரின் மாமியாரும், டிபிக்ஷாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது கொடிகாமம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாலாவித்தாழ்வு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
077 9012 888

(CR 8522) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 11 . 1940



மறைவு 04 . 06 . 2022

**கனகரத்தினம் இரத்தினேஸ்வரி**

அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் இரத்தினேஸ்வரி நேற்று (04.06.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் அமரர் கனகரத்தினம் அவர்களின் மனைவியும், நிர்மலா (சுவீடன்), நிர்மலன், நந்தகுமார் (ஐங்கரன் சூ பலஸ், கோண்டாவில்), கிரிதரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்), குருபரன் (சிறி ஐங்கரன் சூ பலஸ், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவானந்தன், வசந்தகௌரி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை), வனஜா (ஆசிரியர், யாழ் வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை), ஹேமலதா ஆகியோரின் அன்பு மாமியாரும், தனஞ்சயன், கேனுஜன், சிறிகஜன், ஜனனி, அருட்சயன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 1000390
0046 702113015 (சுவீடன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் எண்ணத்தை பிறரால் புரிந்து கொள்ள மாட்டார்கள். குடும்பத்திலும் பிரச்னையை சந்திப்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றம் அடைவீர்கள். உதவி புரிவதாக சொன்னவர்கள் விலகிச் செல்வர்.

**இடபம்:** உங்களுடைய ஆலோசனைக்கு மதிப்பு உண்டாகும். பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள். செயல்களில் இருந்த நெருக்கடி விலகும். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**மிதுனம்:** எதிர்பாராத நஷ்டங்கள் உண்டாகலாம். நிதானித்து செயற்படுவது நல்லது. செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனமும் எச்சரிக்கையும் தேவை.

**கடகம்:** மனம் மகிழும் வகையில் சம்பவம் நடைபெறும். திட்டமிட்டு செயற்பட்டு லாபம் காண்பீர்கள். சிந்தித்து செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். செலவுகள் கட்டுப்படும். எதிர்பாராத வரவு உண்டாகும்.

**சிம்மம்:** எதிர்பாராத செலவுகளால் சங்கடப்படுவீர்கள். திட்டங்கள் தீட்டி செயற்படுத்த முயற்சிப்பீர்கள். தொழிலில் எதிர்பார்த்த நன்மை கிடைக்காது. உங்கள் கவனம் இன்று தடுமாறும்.

**கன்னி:** எண்ணம் இன்று நிறைவேறும். வீட்டைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பணவரவு கூடும். கனவுகள் இன்று நிறைவேறும். எதிர்பாராத பணவரவால் சங்கடங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

**துலாம்:** திட்டமிட்டு தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணவரவு அதிகரிக்கும். வேலை தேடும் முயற்சியில் தீவிரமாவீர்கள். குலதெய்வ வழிபாட்டால் எண்ணம் நிறைவேறும். உற்சாகத்துடன் செயற்பட்டு வருவீர்கள்.

**விருச்சிகம்:** பிரச்னைகள் இன்று முடிவிற்கு வரும். குருவருளால் நினைத்தவற்றில் வெற்றி காண்பீர்கள். தடைகளைத் தாண்டி சாதிப்பீர்கள். மற்றவர்களால் முடியாத ஒன்றை நீங்கள் முடித்துக் காட்டுவீர்கள்.

**தனுசு:** நிதானம் அவசியம். யோசித்து செயற்படுவதால் சங்கடங்கள் ஏற்படாமல் போகும். தாய்வழி உறவுவிஷயத்தில் சங்கடத்தை சந்திப்பீர்கள். எதிர்பார்த்ததை அடைய முடியாமல் போகும்.

**மகரம்:** புதிய பொருள் வாங்குவீர்கள். குடும்ப நலனில் கவனம் செல்லும். மகிழ்ச்சியான நாள். தம்பதிகளுக்கிடையே பிரச்சினை தீரும். சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்:** எதிர்ப்பை முறியடித்து சாதிப்பீர்கள். முயற்சி வெற்றி பெறும். உங்கள் நிலை உயரும். குடும்பத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். அலட்சியம் செய்தவர்கள் இன்று உங்களைப் பாராட்டுவர்.

**மீனம்:** வேலைப்பளு அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். பணியாளர்களுக்கு புதிய சுமை உண்டாகும். பணியில் கவனம் செலுத்த முடியாமல் போகும். உறவுகளால் சங்கடத்துக்கு ஆளாவீர்கள்.

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 40ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு வித்தியாலயத்தின் 26ஆவது சாரணர் குழுவால் இன்று ஞாயிற்றுக்கிழமை வித்தியாலய பிரதான மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை குருதிக்கொடை முகாம் நடத்தப்படவுள்ளது. (ச)


## காணி விற்பனைக்கு

யாழ் நகரத்தில் இருந்து 2 Km தொலைவில் அராலி வீதியில் காணிகள் விற்பனைக்கு உள்ளன.

**077 379 1633**

## பணியாளர் தேவை

1) சிட்டை எழுதுனர் ( Bill Clerk)
2) சிற்றூழியர்
3) வேலை பழகி வேலை செய்ய விரும்பபவர்கள் (ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

மூர்த்தி டிஜிற்றல்
62/20 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

**077 224 7428**

## வாடகைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில், பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக 12 அடி அகலம், 100 அடி நீளம் கொண்ட கடையும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறி சந்தைக்கு முன்பாக 52 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட 3 கடையும், யாழ் K.K.S வீதியில் நீலாம்பரி ஹோட்டலுக்கு முன்பாக வீடும், யாழ் நாவலர் வீதியில் 3 வீடுகளும், யாழ் ஆஸ்பத்திரி வீதி பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக 2 கடைகளும் வாடகைக்கு உண்டு.

**077 723 2535**

## மின்சாரம் துண்டித்து விட்டதா? இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்.

மின்சாரம் இருக்கும் போது பற்றி சார்ஜர் மூலம் மின்சாரம் சேமித்து மின்சாரம் இல்லாத நேரத்தில் சேமித்து வைத்த மின்சாரத்தை பற்றி மூலம் 12V 220V INVERTER மின்சாரம் பயன்படுத்த முடியும். 10 மணித்தியாலம் LIGHT, FAN, TV , RADIO, CCTV CAMERA மின்சாரப் பொருள்கள் பாவிக்க முடியும்.

**J.J GROUP** No:603, K.K.S.Road Jaffna.
021 222 8854, 077 555 5100

## விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 10 பரப்புக்காணியும், யாழ் வைமன் வீதியில் 1 பரப்பில் அமைந்த வீடும், 3 பரப்பில் அமைந்த வீடும், யாழ் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்புக் காணியும், 3 பரப்புக்காணியும் , யாழ் பிறவுண் வீதியில் நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 4½ பரப்புக் காணியும் வீடும். 6 ½ பரப்பு காணியும் வீடும். யாழ் கந்தர்மடம் அரசடி வீதியில் 3 பரப்புக்காணியும் 4 பரப்புக்காணியும் , கந்தர்மடம் பழம் றோட்டில் 1½ பரப்புக்காணியும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: **077 723 2535**

## நியூ பாரதி கல்வி நிலையம்
கந்தரோடை, சுன்னாகம்

## A/L - 2024
### கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

ஆரம்பம்: 05.06.2022 (ஞாயிறு) (மு.ப 9.00 மணி)

எமது ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| இரசாயனவியல் | - திரு.K.கஜேந்திரன் B.Sc(Hons), PGDE |
| பௌதீகவியல் | - திரு.Y.சாந்தரூபன் B.Sc(Hons),PGDE |
| உயிரியல் | - திருமதி.N.வர்மினா B.Sc (Hons) |
| இணைந்த கணிதம் | - திரு.T.S.ரங்கன் B.Sc(Hons),PGDE |
| ICT | - திரு.S.சக்தியாலன் B.Tech (ICT) |

**077 203 7909**


## கண்ணீர் அஞ்சலி



சங்க உறுப்பினர்களான திருமதி சிந்துஜா முகுந்தன் (அனர்த்த முகாமைத்துவ அலகு) திருமதி தாரகா விபூஷன் (உள்ளக கணக்காய்வு அலகு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திரு. பா.முகுந்தன் (திட்டமிடல்அலகு) அவர்களின் அன்பு மாமியாருமாகிய

திருமதி
**கமலாம்பிகை தில்லைநாதன்**

அவர்கள் 04.06.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்


## மணமகன் தேவை

1993 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 7 இல் செவ்வாய் உள்ள அஸ்வினி நட்சத்திரமுடையை (கி.ப 54) Docter மணமகளுக்கு Doctor or Government Engineer மணமகன் தேவை. அரச உத்தியோக ஜாதகங்கள் அதிகம் உள்ளன.

அன்பு திருமண சேவை
யாழ்ப்பாணம் 077 844 8942

(CS 44992) (3/6)


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 04 |
| 02 | 06 |
| 1937 | 2022 |

### திருமதி சண்முகராசா மங்கையற்கரசி

அராலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர்.சண்முகராசா மங்கையற்கரசி அவர்கள் நேற்று [04/06/2022] சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா-சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் செல்லத்துரை-மாணிக்கம் தம்பதியினரின் மருமகளும் அமரர் சண்முகராசா [கார்த்திகேசு] அவர்களின் அன்பு மனைவியும் செல்வராசா [ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்], மோகனதாசன் [தரணன் சிற்பாலயம், அராலி], தவறஜனி [லண்டன்], ரங்கநாதன் [பிரான்ஸ்], அகிலதாசன் [லண்டன்] தேவறஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வஜெயந்தினி [ஓய்வுபெற்ற பதிவுநிலை முகாமைத்துவ உத்தியோகத்தர்-யாழ்.பல்கலைக்கழகம்] தர்சினி, சந்திரசேகரன் [லண்டன்], சிவகாமசுந்தரி [பிரான்ஸ்], சுபாஷினி [லண்டன்], அமரர் மகேந்திரராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் நிமலன் [முகாமைத்துவ உத்தியோகத்தர்-யாழ்.பல்கலைக்கழகம்], திரோஷன் [பொறியியலாளர்-வீதி அபிவிருத்தித் திணைக்களம்], தனுஷா,திலுஷன், தனேஸ்கரன், சபேஷ்கரன், சயிதா, சங்கீதா, டிலோஸ்காந், டர்சன், டனீஸா, கஜுஷ், பிஜுகா, உதயதீபா, உதயதாசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [05/06/2022] ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| அராலி மத்தி, வட்டுக்கோட்டை. | தொடர்புகளுக்கு: 0779310845 0777432188 | தகவல் குடும்பத்தினர். |

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 04 |
| 07 | 06 |
| 1934 | 2022 |

### திருமதி மகேஸ்வரி நவரத்தினம்
### (யோகம்மா ரீச்சர்)

மில் லேன், பிரம்படி, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி. மகேஸ்வரி நவரத்தினம் (யோகம்மா ரீச்சர்) நேற்று (04.06.2022) சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி-பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும், சுகுமார் (வங்கி முகாமையாளர், ஓய்வு), ரேணுகா (ஆசிரியர் - ஓய்வு), ராகுலன் (குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்), சந்திரிகா (ஆசிரிய ஆலோசகர் - யாழ். கல்வி வலயம்) ஆகியோரின் அன்புத்-தாயும், காலஞ்சென்ற சிவராசா மற்றும் கௌரி (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், அரவிந், மைவிழி - தமிழ்ச்செல்வன், பிலஹரி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், சண்முகநாதன், சறோஜினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
குடும்பத்தினர்.

(CS 45042) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரிலிருந்து 'பியர்'

சிங்கப்பூரைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று சிறு நீர மற்றும் கழிவுநீரை மறுசுழற்சி சயேது 'க்ரீனஸ்ட் பியர' என்ற புதுவகையான மதுபானத்தை அறிமுகப்படுததியுள்ளது. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மறுசுழற்சி முறை யில் சபா ருள்களைத் தயாரிக்க பல புதிய கண்டு பிடிப்புகளில் ஈடுபட்டு வருகிறது சிங்கப்பூர.

அந்தவகையில் குடிப்பதற்கு இயலாத சிறுநீர மற்றும் கழிவுநீரை மறுசுழற்சி சயேது 'நியூ வோட்டர்' என்றசப யரில் குடிப்பதற்கு ஏதுவான குடிதண்ணீகை மாற்றி வருகிறது சிங்கப்பூர.

இந்த 'நியூ வோட்டர்' பாதுகாப்பான குடிதண்ணீரின்ரேவதேச தரததைக் கடைப்பிடிப்பது மட்டுமல்லாமல் 'பியர' போன்ற மதுபானங்கள் தயாரிப்பதற்கு ஏதுவான நீர என்று கூறப்படுகிறது.

அதன்படி இந்தத் தண்ணீரைப் பயன்படுததி பியர மதுபானத்தை சிங்கப்பூரிலுள்ள நிறுவனம் ஒன்று தயாரிததுள்ளது. (ே-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 11 . 1938



இறப்பு 29 . 05 . 2022

## திருமதி மரியராணி ஜெயரட்ணம் (ராணி)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் பளை. உருத்திரபுரம். ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மரியராணி ஜெயரட்ணம் (ராணி) அவர்கள் மே 29. 2022 ஞாயிற்றுக்கிழமை தனது 83-ஆவது அகவையில் ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார் கிறிஸ்தோப்பர் - சேதுப்பிள்ளை இணையரின் அன்பு மகளும். அமிர்தநாதர் - மரியம்மா இணையரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற அமிர்தநாதர் பிலிப் ஜெயரட்ணம் (அச்சுவேலி) அவர்களின் மனைவியும். காலஞ்சென்றவர்களான பேர்க்ஸ்மன் இராசையா. அந்தோனிமுத்து ஆகியோரின் சகோதரியும். காலஞ்சென்ற அன்னபூரணம். கமலம். வினிபிறற் சொர்ணம். றோசலின் இராசாத்தி. மேரிதிரேசா பொன்மணி. மேரி. நல்லம்மா. அருட்சகோதரி கென்றிக்கா புனிதம். பிரான்சிஸ் சேவியர். எட்மன் ஜோன் சந்திரசேகரா மற்றும் ஆன்சலீற்றா தியாகேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும். டிலிப்குமார் (தாய்வீடு). மேரிகென்றிக்கா (மேறா). றொனால்ட். அன்ரன் ஆகியோரின் தாயாரும். ரதி. ரகு. மோகனா. நகுலா ஆகியோரின் மாமியாரும். றெனிசன். ஜெனிபர். றொஷானி. றோய். றியோ. சுயேன். சுரேன் ஆகியோரின் பேத்தியும். இனியாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இறுதி வணக்கத்துக்காக ஜூன் 05 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணி வரையும். ஜூன் 06 திங்கட்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 10:00 மணி வரையும். Ajax Crematorium & Visitation Centre (384 Finley Ave, Ajax, ON LIS 2E3) இல் வைக்கப்பட்டு. மு.ப 10:30 மணிக்கு Holy Redeemer Church (796 Eyer Drive Pickering L1W_32) இல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு. நண்பகல் 12:00 மணிக்கு Christ the King Catholic Cemetery (7700 Steeles Ave E,Markham, ON L6B 1A8) இல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

டிலிப்குமார் : 1-416-857-6406
அன்ரன் : 1-416-669-5474
ரகு : 1-437-229-8577
ரூபன் : 1-416-834-6130
டொனால்ட் : 1-416-561-5555
ரஞ்சி : 94-77-3437-715

தகவல்: குடும்பத்தினர்

(CS 1136) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 - 03 - 1947



மறைவு 03 - 06 - 2022

## அப்பாத்துரை சண்முகநாதன்

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் கடற்படை உத்தியோகத்தர் அப்பாத்துரை சண்முகநாதன் நேற்றுமுன்தினம் (03.06.2022) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா தவிலம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற லங்காதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, சின்னத்துரை சதாசிவம், குணவதி, ராஜேஸ்வரி, இரத்தினசிங்கம், வரதலட்சுமி மற்றும் குணநாயகி, பத்மேஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நவமணி, புண்ணியசிங்கம், சண்முகசுந்தரம், குலேந்திரன் மற்றும் கமலாம்பாள், லோகநாயகி, ரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் ஹரிதாஸ், பிறேமதாஸ், கஜந்தினி, குணதாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

51/1 இலந்தைக்குளம் வீதி,
அரியாலை.

021 222 0514

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 02 . 1944



மறைவு 04 . 06 . 2022

## திருமதி இராசரத்தினம் இந்திராணி

கோப்பாய் வடக்கு கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் இந்திராணி நேற்று (04.06.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான அம்பலவாணர். பூரணம் ஆகியோரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம். செல்லாச்சி ஆகியோரின் பாசமிகு மருமகளும். சாந்தேஸ்வரி (சாந்தி). தேவகி. தயாபரன் (பிரான்ஸ்). சகிலா (லண்டன்). ஜானகி. கிருபாகன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். சிவபாலகுமாரன். தேவராசா. யர்மிளா காலஞ்சென்ற கிருஸ்ணானந்தன் மற்றும் ஸ்ரீவசந்தன். மஞ்சுளா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி. மகேஸ்வரி மற்றும் கந்தசாமி. நவரட்ணம். சற்குணநாதன். செல்வரட்ணம். யோகநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரியும். செந்துர்க்கன் (லண்டன்). மதுரா. அனுஷன். கெங்காதரன் (கனடா). கேதுஜா (கனடா). நிருஜன். ஜசீபன். தரணிகா. ஷதுர்சிகன். அபிஷ் (லண்டன்). ஸ்ரீசாந். விஷ்ணவன் (சுவிஸ்). பகீர்ணன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மிதுரன் (கனடா). லகிரன் (கனடா). ஜர்ணிகா (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியாட்டி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
077 923 5878 - சாந்தி
077 959 6550 - தேவகி
077 315 6875 - ஜானகி

# மரண அறிவித்தல்



## ஓங்காரரூபி சண்முகநாதன்

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு ஆதீனத்தின் முழுநேரத்திருத் தொண்டருமான செல்வி ஓங்காரரூபி சண்முகநாதன் நேற்று (04.06.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் அன்னலட்சுமி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற மகாலட்சுமியின் சிறிய மகளும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் மருமகளும். திருமதி அருள்மொழிதேவி. யோகராணி ஆகியோரின் சகோதரியும். சிவரஞ்சனின் மைத்துனியும், மாதுளனின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாருக்கான பிரார்த்தனைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல.692. பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் நடைபெற்று மதியம் 12.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

021 222 0103
077 222 0103

தகவல்:
சிவகுரு ஆதீனம்
692, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS 1145) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கட்டிட இடிபாடு மண் மற்றும் கழட்டிய செற் தகரங்கள் பைப்புகள்

076 821 9414 - JAFFNA

## இரசாயனவியல் வகுப்பு Tamil / English

A/L மாணவர்களுக்கான இரசாயனவியல் வகுப்புக்கள் தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும். (CS 45033) (3/6)

தொடர்பு : 076 751 6379

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்திற்கு பெண் நிர்வாக உத்தியோகத்தர் தேவை. தகுதியானவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 074 0351

## நாகபூஷணி திருமண சேவை

மிகப்பொருத்மான
மணமக்கள் ஜாதகங்கள்
உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

021 222 9306, 077 138 7596

(cs 45043) (2/6)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வீட்டுப்பணிப்பெண் தேவை

077 002 8711

## வீடு விற்பனைக்கு

கொழும்பு-05 கிருலப்பனையில் (காலிங்க மாவத்தை காளி கோவிலுக்கு அருகாமையில்) இரண்டு மாடி வீடு ஒன்று. மூன்று படுக்கை யறைகள். இரண்டு ஹோல்கள். இரண்டு சமைய லறைகள். இரண்டு குளியலறைகளுடன் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உறுதியோடு விற்பனைக்குண்டு. **விலை 80 லட்சம்**

074 146 6307, 071 4255 177

## மணமகள் தேவை

1983 இல் பிறந்த கொழும்பைச் சேர்ந்த BA படித்து சுயதொழில் செய்யும் மண மகனுக்கு (7 இல் செவ்வாய் தோஷம் குறைந்தது) பொருந்தக்கூடிய அழகிய படித்த மணமகளை எதிர்பார்க்கின்றோம் உள்நாட்டு, வெளிநாட்டு (CR 36079) (3/6)

075 669 6801, 011 259 8824


# 22ஆம் வருட நினைவுத்துளிகள்

திதி:- 05.06.2022

ஓய்வு நிலை இராணுவ அதிகாரியும், க.பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவருமான

அமரர்

**சின்னத்துரை கனகசபை**

அவர்களுக்கும் இறையடி சேர்ந்த பெரியமாவடி

**விசாலாட்சி சிதம்பரப்பிள்ளை**

அவர்களுக்கும் இந்நாளில் உம் ஆத்மா நிலையான அமைதி கொள்ள பிரார்த்திக்கின்றோம்.

"நினைவுகள் தோற்றுப்போய் நாம் அழுத பொழுதுகள். காலங்கள் பல கடந்தாலும் என்றும் எம் மனதில் காவியமாய் இருப்பீர்கள்"




என்றும் நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"ஈஸ்வரி இல்லம்"
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 27 - 04 - 1938 | | 03 - 06 - 2022 |



## ஆறுமுகம் நடராசா (சோதிடர்)

ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடராசா அவர்கள் நேற்று முன்தினம் (03.06.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும்,மகேஸ்வரி, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயராணி (கொழும்பு) வசந்தராணி (கொலண்ட்), ரவீந்திரன் (நோர்வே), ஜெயக்காந்தன் (சுவிஸ்), கோமளகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குமாரசிங்கம், கோபாலசிங்கம், ஆலின்நிருபா, பவானி, சுவர்ணா ஆகியோரின் அன்பு மாமனாரும், ராஜன், கிரிஜா, நிஷாந் சுகன்யா, வினித், விதுலா, நிவேதா, ருவிந், ஆகாஸ், ஜெருஷா, தயான், திவ்யா, ஆகியோரின் அன்புப் பேரனும், றீனா, நிவின், கெவின், றவோன், டியானா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.06.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


077 588 9773

தகவல் :
குடும்பத்தினர்

(CS 45044) (3/6)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 09 - 04 - 1970 | | 04 - 06 - 2022 |



## ஜெபநேசன் கிறிஸ்டி ஜெயரூபன்

(யாழ். மாவட்ட செயலக களஞ்சியப் பொறுப்பாளர்)

உடுவில் டச்சுவீதியைப் பிறப்பிடமாகவும், கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெபநேசன் கிறிஸ்டி ஜெயரூபன் அவர்கள் நேற்று (04.05.2022) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெபநேசன் - நேசமலர் (அலிஸ்) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், தங்கம்மா அவர்களின் மருமகனும், கலைமதி (கைமா) யின் அன்புக் கணவரும், கல்யாணி, சேயோன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கீர்த்தனனின் அன்பு மாமனாரும், தருண்ஜா, டிதுஸ்யா ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்வதிறோஸ், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம், இரட்ணராசா, லில்லி, கிறேஸ் ஆகியோரின் பெறாமகனும், அல்பிரட் ஜெயசிங்கம், ஜேம்ஸ் ஜெயகுலன், ஜெரோமியா, ஜெயபாலன் ஆகியோரின் சகோதரனும், மதிவதனன் (சுதன்), றூபேஸ் ஜெயக்குமார், தயாரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கொட்டடியில் அமைந்துள்ள இலங்கைப் பெந்தே கொஸ்தே சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னிய சிங்கம் வீதி,
கைதடி வடக்கு.


077 603 8524

தகவல் :
குடும்பத்தினர்

(CS 45039) (3/6)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 27 . 05 . 1944 | | 04 . 06 . 2022 |



## திரு.கந்தையா பஞ்சலிங்கம்

(ஓய்வு பெற்ற பரிசாரகர் தெல்லிப்பளை வைத்தியசாலை)

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தையா பஞ்சலிங்கம் 04.06.2022 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும் முருகானந்தி (யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க பாடசாலை - ஆசிரியை) அவர்களின் அன்புத் தந்தையாரும் தாசன் பாபுவின் மாமனாரும் தசாங்கன், கனிஸ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கீரிமலை சொம்பொன் வாய்க்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரத்தியேக வகுப்புக்கள்

A/L இணைந்தகணிதம் 2022.2023.2024 மாணவர்களுக்கு தனியாகவோ or குழுவாகவே வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்

**074 111 0790**

## A/L இணைந்த கணிதம்

A/L 2022, 2023, 2024 மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்

**077 832 4002**

## வேலையாள்கள் தேவை

ICE CREAM தயாரிக்கவும் Jaffna Food தயாரிக்கக்கூடியவர்களும், வெயிட்டர்ஸ், உதவியாள்கள் மற்றும் வீட்டு வேலைக்கு ஆண், பெண் வேலையாள்களும் தேவை. (CR 36080)(3/6)

**077 188 9999**

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**077 869 5005** (CS 45024) (3/6)

## வாடகைக்கு

யாழ் வைத்தியசாலை வீதியில் முதலாம் மாடிக்கடைகள் வாடகைக்குண்டு. அலுவலகத்திற்கும் ஏற்றது.

**077 162 0626**

## வீடு வாடகைக்கு

யாழ். கொக்குவில் மருத்துவபீடத்திற்கு அருகில் சிறு குடும்பத்திற்கான வீடு வாடகைக்கு உண்டு

**077 363 6129**

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பம் 1996 உத்தரம் (BA), 1996 கேட்டை(BA) 1996 அச்சுவினி (Pharmasist), 1995 சதயம் 8 செவ்வாய் வெளிநாட்டு மணமகன்கள் தேவை.

**077 078 3832**

## வாடகைக்கு

மாவிட்டபுரம், K.K.S தெல்லிப்பழை, மல்லாகம், நல்ல குடியிருப்பு பகுதியில் சிறிய வீடு வாடகைக்கு தேவை.

**077 964 9245**

## காணியுடன் வீடு விற்பனைக்கு - மன்னார்

தாழ்வுபாடு வீதி, சாவற்கட்டு, மன்னார் 15 பேர்ச் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது. மன்னார் வைத்தியசாலையில் இருந்து 300 மீட்டர் தூரத்தில் உள்ளது.

**077 844 8020** (CS 45028) (3/6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 ஆம் ஆண்டு பிறந்த மிருகசீரிடம் நட்சத்திரம் 24 1/2, கிரகபாவம் 10 இல் சூரியன் செவ்வாய்கொண்ட பட்டதாரி அரசதொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான அசர தொழில்புரியும் உற்நாட்டு / வெளிநாட்டு மணமகளை எதிர்பார்கின்றோம். (cs 45030) (2.6)

**077 774 0928**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985இல் பிறந்த மூலநட்சத்திரம், 3இல் சூரியன் செவ்வாய் 31 கிரகபாவம் கொண்ட சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். தரகர் தேவையில்லை.

**077 706 9148**

## வேலையாட்கள் தேவை

பளையில் அமைந்துள்ள தென்னந் தோட்டத்திற்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை. அத்துடன் உழவு இயந்திரம் இயக்க கூடியவரும் தேவை.

**077 183 2404**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 80 ரூபாய் பூச்சுவலை, கட்டுவேலைகளும் செய்துதரப்படும்.

**077 334 1281**

## Study in UK / Canada / Spain

BEVERLEY INTERNATIONAL

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSW
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- சாதாரணக் கல்விக் கட்டணம்
- வங்கி பண வைப்பிற்கான வழிகாட்டல்

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

மேலதிக தகவல்களுக்கு : **0776 929 773**

பாத்திமா : **0706 697 660** | வேணுகா : **0718 517 994**

**Beverley International**

Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka.

Tel : 0112 576 656

Jaffna Office - No. 401, Clock Tower Road, Jaffna. Tel : 021 22 10 277

## மணமக்கள் தேவை

1986 இல் பிறந்த பூரம் நட்சத்திரம் லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு PR உள்ள பெண்ணையும், இங்கிலாந்தில் (Ireland) வசிக்கும் 40 வயது மணமகனுக்கு (கேட்டை நட்சத்திரம்) அழகான பெண்ணையும், கனடாவில் வசிக்கும் 32 வயதுள்ள அஸ்வினி 4ஆம் பாதம் பெண்ணுக்கு இலங்கையில் படித்த அழகான மணமகனையும் தேடுகின்றோம். (CS 45003) (3/6)

**சொர்க்கம் திருமண சேவை**

**001 416 666 1855, 077 887 6969**

## வீடு வாடகைக்கு

**நிறுவனங்கள் மற்றும் களஞ்சியசாலைகள் விரும்பத்தக்கது**

A9 வீதி மற்றும் யாழ். கச்சேரிக்கு அருகாமையில் 1650 சதுர அடி பரப்பளவு கொண்ட 4 1/2, பரப்பு காணியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு.

- 3 அறை
- 2 Hall
- 1 சமையலறை
- வாகன தரிப்பிட வசதி
- கிணறு வசதி

அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் விரும்பத்தக்கது

தொடர்புகளுக்கு: **077 509 6617**

(சனி மற்றும் ஞாயிறு தினங்களில்) (cs.19626) (2.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 27.07.1956 — மறைவு 05.05.2022

**அமரர் ஸ்ரீகாந்தமோகன் பழனிச்சாமி**


"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

உற்றார், உறவினர்,
குடும்பத்தினர்

யாழ்ப்பாணம்.

(cs 44993) (2.6)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னத்தம்பி பொன்னம்பலம் (மகாலிங்கம்)**

(கார் உரிமையாளர் - பஸ்தரிப்பு நிலையம் - சுன்னாகம்)

தோற்றம் 13.09.1947 — மறைவு 20.05.2018

திதி: பூர்வபக்க ஷஷ்டி

எம் அருமை அப்பா!
அன்பாலும் பண்பாலும் நல்லோர் மனங்கவர்ந்தீர்
நல்வாழ்வு வாழ அயராது பாடுபட்டீர்
கல்வியில் நாம் உயர கருத்தாய் எமைக்காத்தீர்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவராய் நீர் வாழ்ந்தீர்
வாழ்ந்து எமை விட்டுப் பிரிந்து நான்காண்டு மறைந்ததப்பா
ஆறிடுமோ எம் துயர் அழுகின்றோம் அப்பா
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

நித்தம் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
(விதுஜா கூல்ஸ்பொட்
K.K.S. றோட், மல்லாகம்.

(cs.41203) (2.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



அமரர்

**சின்னத்தம்பி கனகையா**

கடந்த 06.05.2022 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உலகின் பல பாகங்களில் இருந்து தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபங்களை பகிர்ந்துகொண்டவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்ளுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

42, Mews Street
Colombo 02.

+94 777875264
+94 719875264

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 07 . 1929

மறைவு 03 . 06 . 2022



## பிலுப்பையா விக்ரோறியா (பாக்கியம்)

அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிலுப்பையா விக்ரோறியா (பாக்கியம்) 03.06.2022 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிர்வாதம் லூசானாப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், பாவிலுப்பிள்ளை அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், பாவிலுப்பிள்ளை பிலுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம், மரியம்மா, தேவசகாயம் ஆகியோரின் சகோதரியும், அந்தோனிப்பிள்ளையின் மைத்துனியும், காலஞ்சென்ற றீற்றா புஷ்பராணி, சகாயராசன் (கனடா), அன்ரனி லூட்ஸ்மேரி, காலஞ்சென்ற சிறிராசன், எமி எம் லூயிஸ் (கனடா), அன்ரோனியா டெய்சி, மேரி ஜெசிந்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஜேசுதாசன், மேரி ஜெசிந்தா, காலஞ்சென்ற சேவியர் வில்பிரட், மேரி ஜெனிற்றா, காலஞ்சென்ற மரிய றூபநாயகம், பீற்றர் ரெட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், வரதராஜன் - அனிற்றா யூலியற் (ஜேர்மனி), அன்ரன் யூபேட்-டனுஷியா (அமெரிக்கா), கனிஷ்ரா யூடிற் (கனடா), கல்வின், எர்வின், ஜெயறூபன்-வேஜின் சுஜீவினி, ஆதித்தன் – ஜெஸ்மின் கார்மேலா, ஜெனற் காமலிற்றா, ஜெனுஷன், டிலக்ஷி, ஜெனிஸ்ரன் – மெற்றில்டா, ஜோய்-டிலக்ஷனா, சுகந்தன் – மரிய தர்ஷனா, றொபின்சன், மரிய றெனிஸ்ரா, ரெறி, ரிஃபனி, ரானியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், டில்ஷான், டிலக்ஷியா, றம்மி, பிரவிந்த், மெறில் சேவியர், கபிஷனா, திவ்யாயினி, பவிஸ்ரன், டீபிகா, ஷெறிஸ்ரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலி, 06.06.2022 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அல்லைப்பிட்டி புனித உத்தரிய அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அல்லைப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லைப்பிட்டி - 3


தகவல்:
குடும்பத்தினர்

(CS 45032) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 01 - 1942

மறைவு 03 - 06 - 2022



## வல்லிபுரம் தம்பிஐயா

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், V.T.S லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தம்பிஐயா கடந்த (03.06.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் பெரியபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஈஸ்வரியின் அன்புக்கணவரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற தங்கம்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி, ஏகநாதன், மனோன்மணி ஆகியோரின் சகோதரரும், மதியழகன் (Micmac - Distributor) வளர்மதி (ஆசிரியை - பதுளை சரஸ்வதி மத்தியகல்லூரி), மதியரசி (ஆசிரியை - மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி), மலர்மதி (முகாமைத்துவ உதவியாளர் வலி தெற்கு பிரதேச சபை), வான்மதி (ஆசிரியை - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமலதா, ஆனந்தரூபன் (Link Distributor - பதுளை) ஜெயக்குமார் (மின் இணைப்பாளர் - Northern Central Hospital) விஜயதாசன் (லீலா அரிசி ஆலை மருதனார் மடம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனிஷா, விகாஷ், ஹருணிகா, அபினாஷ், நிரோஷ், அதேஷ், அக்ஷயா, ஆஹீசன், தன்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 இற்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.T.S லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல் :
குடும்பத்தினர்
077 684 8355

(CS 45028) (3/6)

# மரண அறிவித்தல்



## தேவராஜா புஸ்பராணி

மன்னாரை பிறப்பிடமாகவும் மானிப்பாய் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராஜா புஸ்பராணி கடந்த (01.06.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கௌரியம்மா (கௌரி), நாகராணி (சுமதி), ஜெபநேசன் (அமலன்), தையல்நாயகி (தங்கா), மேரித்திரேசா (செல்வி), யூதாததேயூ (ரூபன்), தேவதர்சினி (தர்சினி), பகீரதன், ஏகலைவன் (அஜந்தன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகேந்திரம், தங்கவேல், ரேணுகா, பசில், சாந்தினி, கிரிதாஸ், ரூபினி ஆகியோரின் அன்பு மாமியாரும், மதுசன், தாரு, நவீன், நரேஷ், தனேஸ், டேனு, சபேசன், சஞ்சீவன், சங்கீதா, கார்த்திகா, இவாஞ்சலின், ஜக்சன், அபி, திசாலி, அக்ஷரா, சம்யுக்தா, அபி, சிபி, கிரி, துளசி, துவாரகன் ஆகியோரின் பேர்த்தியும், சந்தோஷ், சாலினி, சாமினி, தியா, யதுஸ்காந், றெஸ்மிகா, அபிசாந் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆறுகால் மண்டபம் இன்பம் மலர்ச்சாலையில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:

செல்வி - 077 196 4740
கௌரி - 077 495 0882
[illegible] - 077 617 2809
[illegible] - 077 138 6607

தகவல்
மருமகன்
(ஐ.கிரிதாஸ்)

பிறப்பு 23.05.1946

இறப்பு 01.06.2022

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கைத்...

பல்வேறு திட்டப் பணிகளை மத்திய இணை அமைச்சர் ஆய்வு செய்துவருகிறார். இந்நிலையில் இலங்கைத் தமிழர்களுக்கான உதவிகள் குறித்து மத்திய அமைச்சருடன் ஆளுநர் தமிழிசை ஆலோசனை நடத்தினார்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், சந்திப்பின்போது வெளியுறவுத்துறை சார்பில் இலங்கை தமிழர்களுக்கான உதவிகள் பற்றியும், புதுச்சேரியில் நலிவடைந்த கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கலாசார நிகழ்வுகளை நடத்துவது பற்றியும் மற்றும் பல மத்திய அரசு சார்ந்த திட்டங்களை நிறைவேற்றுவது பற்றியும் புதிய திட்டங்கள் கொண்டு வருவது பற்றியும் விவாதித்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)


## யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை

**100ஆவது சர்வதேச கூட்டுறவு தினம் மற்றும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் பொன் விழாவையொட்டிய போட்டிகள்**

சபையினால் மேற்படி நிகழ்வுகளை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டிகளை

**6, 7, 8 - பிரிவு - I**
**9, 10, 11 - பிரிவு - II**
**12, 13 - பிரிவு - III**

ஆகிய பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது. போட்டிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் அறிவித்தல்களை சபையில் பெற்றுக் கொள்ளலாம்.

❖ போட்டி தொடர்பான சுற்றறிக்கைகள் பாடசாலைகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**செயலாளர்,**
**யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை**
**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப 2ஆவது மாடி**
**இல. 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி இல**
**021 222 2324**
**Jaffnadcc@gmail.com**

(CR 36073) (3/6)



## நினைவஞ்சலி

2 ஆம் ஆண்டு (அப்பா)　　1 ஆம் ஆண்டு (அம்மா)

பிறப்பு 07 - 04 - 1939　　இறப்பு 26 - 03 - 2020



பிறப்பு 14 - 11 - 1942　　இறப்பு 18 - 05 - 2021

**நல்லதம்பி நவரத்தினசிங்கம்**
**(முன்னாள் கமநல சேவை உத்தியோகத்தர்)**

**நவரத்தினசிங்கம் கிரிசாம்பாள்**
**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**
திதி: 06.06.2022

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்**
**வானுறையும் தெய்வம் ஆகினீர்**
அம்மையும் அப்பனுமான ஒப்பிலாமணிகளே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர்
வானுறையும் தெய்வம் ஆகினீர்
செம்மையாய் செதுக்கி எமை வளர்த்தீர்
சிறப்பான வாழ்வமைத்துத் தந்தீர் - நீவிர்
இம்மையில் எம் பெற்றோராய் வாய்த்ததெம் தவப்பயன்
எம்மை விட்டு என்றும் அகலாது உம் நினைவுகள்
என்றும் அணையாத தீபங்களாய் வானில்
ஒளிவீசிப் பிரகாசித்துக் கொண்டிருப்பீர்

உங்கள் நினைவுகளுடன் வாழும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**465/4 K.K.S வீதி,**
**யாழ்ப்பாணம்**



## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 04 . 1928　　இறப்பு 05 . 06 . 2022



### திருமதி அன்னலட்சுமி சந்திரசேகரம்பிள்ளை

திருநெல்வேலி, இராமநாதன் வீதியை சேர்ந்த திருமதி அன்னலட்சுமி சந்திரசேகரம்பிள்ளை நேற்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வப்பெருமாள் நாகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற திரு.க.சி.சந்திரசேகரம்பிள்ளையின் மனைவியும், காலஞ்சென்ற சிவராசபிள்ளையின் சகோதரியும், Dr.நிலாயதாச்சி, காயாரோகணன் (ஓய்வு பெற்ற பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற பராபரை (மாநகர பொறியியலாளர்), சிவானந்தவல்லி (ஆசிரியர், B.Com.MBA) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற மாவட்ட மருந்தாளர்), தபோநிதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும், Dr. அரவிந்தன் (உதவி சுகாதார வைத்திய அதிகாரி), Dr.லோகிதா அரவிந்தன் (யாழ். போதனாவைத்தியசாலை), சுதர்சன் (அவுஸ்ரேலியா), திருமதி சுதர்சினி சுதர்சன் (B.A - அவுஸ்திரேலியா),சிவதர்சன் (UK), திருமதி கலைவதனி சிவதர்சன் (B.A - UK), Dr.சௌமி (யாழ். போதனா வைத்தியசாலை), லவலோஜன் (பொறியியலாளர்), சௌஜா (வைத்தியபீட மாணவி), கஜானன் (பொறியியல் பீட மாணவன் - மொறட்டுவ), சௌயந்தி (விவசாய முகாமைத்துவபீட மாணவி - வயம்ப) ஆகியோரின் பேர்த்தியும், ஆருக்ஷி, ஆகர்ஷி, சாருஜன், ஸாஷ்வி, சுவஸ்தி, ஆத்மி, அகிஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.06.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**228/2, சேர் பொன். இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி.**

தகவல்:
**மகன் - [illegible]**
**074 144 9899, 077 731 4166**

(cs.45079) (2.6)



## மரண அறிவித்தல்

மண்ணில் 20 . 06 . 1935　　விண்ணில் 04 . 06 . 2022



### அமரர் திரு. சின்னத்தம்பி அரியநாயகம்

**(ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர் E.S)**

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர் சின்னத்தம்பி அரியநாயகம் அவர்கள் கடந்த (04.06.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற சேதுப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமகள், திருச்செல்வம், தயாபரன், துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதன்மோகன், ஜீவிதா, சண்முகப்பிரியா, பூர்ணிமா ஆகியோரின் அன்பு மாமனாரும், அட்சரன், அபிஷ்ணவி, தேனுஜன், ஹரிஸ்மன், ஜெயவைஷ்ணவி, நேத்ரன், தருணிகா, பிருத்திகா, டிவேஷ்கரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2022) திங்கட்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 349 4480**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CR 36084) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் மூலமாக

# இலங்கையர்களின் முகத்தில் புன்னகை

## ஆஸி. அணித் தலைவர் தெரிவிப்பு


கொழும்பு, ஜூன் 5

பொருளாதாரப் பின்னடைவுக்குள் நலிந்துபோயிருக்கும் இலங்கை மக்களின் முகங்களில் கிரிக்கெட் மூலமாக நாங்கள் புன்னகையைக் கொண்டுவருவோம் என்று தெரிவித்தார்அவுஸ்திரேலியஅணித்தலைவர் ஆரோன்பின்ஞ்.

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாளைமறுதினம்இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இருதரப்பு கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகின்றது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே பின்ஞ் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் இலங்கை மண்ணில் கிரிக்கெட் விளையாடவுள்ளோம். இந்தத் தொடர்மூலமாகஇலங்கைமக்களின் மனங்களிலும்முகத்திலும்கொஞ்சம் புன்னகையை வரச்செய்ய முடியும் என்று நாங்கள் எண்ணுகின்றோம். கிரிக்கெட் விளையாடுவதற்கு உலகிலுள்ளசிறந்தஇடங்களில்இலங்கையும் ஒன்று. இங்குள்ள ரசிகர்களின் அன்பும், உபசரிப்பும் அற்புதமானவை - என்றார். அவுஸ்திரேலிய அணி சுமார் ஒன்றரை மாதங்கள் இலங்கையில் தங்கியிருந்து மூன்று வகையிலுமான ஆட்டங்களிலும் விளையாடவுள்ளது. முதலாவதாக ரி-20தொடர்நடைபெறவுள்ளது. இந்தத் தொடரின் மூன்று ஆட்டங்களும் முறையே ஜூன் 7, ஜூன் 8 மற்றும் ஜூன் 11ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடர் ஜூன் 14 ஆம் திகதியும், இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட்தொடர்ஜூன்29ஆம்திகதியும் ஆரம்பமாகவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ம)




## ஓட்டோக்களுக்கு எரிபொருளை சீராக வழங்குவதற்குத்திட்டம்!

கொழும்பு, ஜூன் 5

முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள்விநியோகத்தைஎதிர்காலத்தில்பிரச்சினை ஏற்படாத வகையில் சீராகப் பேணுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று பிரதமர் ரணில்விக்கிரமசிங்கதெரிவித்தார். முச்சக்கர வண்டிச் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்றசந்திப்பின்போதே பிரதமர் இதனைத்தெரிவித்தார்.

நாட்டுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம்500மில்லியன்டொலர் தேவைப்படுகின்றது. எனவே, நாடு எதிர்நோக்கும் நெருக்கடியை கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் முச்சக்கரவண்டி தொழிற்றுறையை பாதுகாப்பதற்குமேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன்போதுவிரிவாககலந்துரையாடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### இலங்கை...

**கூரைத் தகடு தடை**

ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளுக்கு 2017 இல் இலங்கை தடை விதித்தபோது, மறைமுக இராஜதந்திர மோதல் ஏற்பட்டிருந்தது. இதன் எதிரொலியாக இலங்கையில் இருந்து தேயிலை உள்ளிட்ட அனைத்து விவசாய உற்பத்திப் பொருளகளையும் இறக்குமதி செய்வதற்கு ரஷ்யா கட்டுப்பாடுகளை விதித்தது. இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேயிலைத் தொகுதி ஒன்றில் கஹப்ரா வண்டு எனப்படும், பூச்சி கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, கட்டுப்பாடுகளை விதிக்க, முடிவு என அப்போது ரஷ்யா காரணம் கூறினாலும், அஸ்பெஸ்டஸ் கூரைத் தகட்டுக்கான தடையால்தான் இந்நிலைமை ஏற்பட்டது.

**சுற்றுலாத்துறைக்கு ஆப்பு**

அதன்பின்னர் கடும் பிரயத்தனங்களுக்கு மத்தியிலேயே ரஷ்யாவை, இலங்கையால் திருப்தி அடைய வைக்க முடிந்தது. ஆனால், தற்போதைய நிலைமை சிக்கலுக்குரியது என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

'ரஷ்யாவில் இருந்தே கூடுதல் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். அதற்காக ஏரோபிளட் நிறுவனம் பிரதான தேர்வாக உள்ளது. எனவே, இவ்விவகாரம் சுற்றுலாத்துறையிலும் தாக்கத்தை செலுத்தும். திண்டாடும் பொருளாதாரத்துக்கு அது மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும்' எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதேவேளை- சுமுகமாகத் தீர்க்கக் கூடியதாக இருந்த பிரச்சினையை தனது இயலாமையால் அரசு, இராஜதந்திர மோதலாக்கி கொண்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

**சஜித் கண்டனம்**

ரஷ்யாவுடன் வீண் பிரச்சினை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் எமது நாட்டு பொருளாதாரத்துக்கே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அரசின் இயலாமையும் வெளிப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்தார்.

ரஷ்யாவின் விமானமொன்று, வணிக நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பைநான்விமர்சிக்கப்போவதில்லை. அதற்கான தார்மீக உரிமையும் எனக்கு கிடையாது. ஆனால், இந்தப் பிரச்சினை சர்வதேசம் வரை சென்று, இராஜதந்திர நெருக்கடியாக மாறுவதற்கு முன்னர் அதனை தீர்த்திருக்கலாம். ஆனால் தாங்கள்தான் சர்வதேச ஜாம்பவான்கள் எனக் கூறிக்கொள்பவர்கள், அதனைச் செய்யவில்லை. ரஷ்யாவில் இருந்துதான் கூடுதல் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அங்கிருந்து விமானம் வருவது தடைப்பட்டுள்ளது. தேயிலை ஏற்றுமதியும் அந்தநாட்டை தங்கியுள்ளது. எனவே, எமது நாட்டுக்குத்தான் பிரச்சினை ஏற்படப்போகின்றது ' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**தயான் ஜயதிலக**

இதற்கிடையில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் என மூவரும் இணைந்து, இப்பிரச்சினைக்கு உடன் தீர்வு காணவேண்டுமென இராஜதந்திரியான தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் உள்ளிட்ட விவகாரங்களின்போது ரஷ்யா, இலங்கைக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றது. எனவே, அந்நாட்டை ஒருபோதும் பகைத்துக்கொள்ளக் கூடாது என மேலும் சில இராஜதந்திரிகள் குறிப்பிட்டனர்.

ரஷ்யா, உக்ரைன் மோதலால் உலக வல்லரசுகள் மோதிக்கொள்கின்றன. எனவே, இலங்கை அணிசேராக் கொள்கையில் உறுதியாக இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சர்ச்சைகளே படையெடுக்கும் என அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை - சர்வதேச நாணய நிதியம் அமெரிக்காவின் தாளத்துக்கு ஆடுகின்றது. இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை சரணடைந்ததால், இப்போது சர்வதேச நாணய நிதியத்துக்காக ரஷ்யாவுடன் மோதுகின்றது என்ற அபிப்பிராயமும் கொழும்பு அரசியல் விமர்சகர்கள் மத்தியில் உண்டு. (அ-ஓ-5-44)

### சுமந்திரன்...

வெள்ளவத்தை தயா வீதிக்கருகில் இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவம் குறித்து பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் இல்லத்துக்குச் செல்லும் ஒழுங்கையை அண்டி காவலுக்கு நின்ற சிப்பாய்களில் ஒருவரே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (அ-ஓ-இ)

### 208 கிலோ...

மன்னாரிலிருந்து வந்து வாடகைக்கு வசித்தவர்களின் வீடே சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதிலிருந்தே கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் விசேட அதிரடிப்படையினர் குறிப்பிட்டனர். (அ-ஓ-214)

### ஆசிரியர்களுக்கும்...

யர்களின் பாடநேரங்களை அதிகரித்து அவர்களை சுழற்சி முறையில் அழைப்பதே பொருத்தமானது. இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சருக்கு, அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் சரா. புவனேஸ்வரன் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், நாளுக்கு நாள் எரிபொருள்களின் விலைகள் அதிகரித்தபடியே உள்ளன. இந்நிலையில் ஒவ்வொரு நாளும் பயணம் செய்வதென்பது உழைப்பின் முழுத் தொகையையும் பயணத்துக்கு செலவழிக்க வேண்டியுள்ளது. எனவே, ஆசிரியர்களுக்கு சுழற்சி முறையை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். பாடசாலை அதிபரின் நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டதாக நெகிழ்ச்சிப் போக்குடையதாக இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

உணவுப்பஞ்சம், போக்குவரத்துக் கஷ்டம், அன்றாட வாழ்க்கைக்கான துயரம் இவை அனைத்துமே மாணவர்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டில் உள்ள குழந்தைகளையும் பாதித்துள்ளது.

போதிய போசாக்கின்மையால் குழந்தைகளின் ஆரோக்கியம் கேள்விக்குறியாகியுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதனை மருத்துவத்துறையினர் எச்சரித்துள்ளனர். இது அபாயகரமானது என்பதால் மாணவர்களின் மதியபோசனம் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கான போசாக்கு உணவு பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஓ-125)

### 'ஒன்றானால்...

இந்தப் போராட்டத்துக்கு மேலும் பல சிவில் அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்தன.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி விலக வேண்டும் என பொதுமக்களிடம் கையொப்பமும் திரட்டப்பட்டது. இசை நிகழ்ச்சி மற்றும் கலாசார நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றன.

'கோத்தா வந்தால் நல்லது நடக்கும் என்றார்கள். அதன்பின்னர் ரணில் வந்தால் சிறப்பு என்றார்கள். ஆனால் நாடு சீரழிந்துள்ளது. வளங்கள் விற்கப்படுகின்றன. எனவே, இந்த அரசு வீடு செல்ல வேண்டும்' என போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் வலியுறுத்தினர். (அ-ஓ-44)

### நேற்றும் சூடு...

பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள்தொடர்பானபொலிஸ் உயர் அதிகாரிகள் தொடர்புபட்ட வழக்கின் சாட்சிகளை இலக்கு வைத்தே இந்தச் சம்பவங்கள் இடம்பெறுவதாக முதல் கட்ட விசாரணைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்ப்பாசனக்...

கிளிநொச்சி - மருதநகர் பகுதியில் ஒன்றரை வயதுச் சிறுவன் நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளான். அதேயிடத்தைச் சேர்ந்த நிசாந்தன் சபீசன் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான். நேற்றுமாலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- தாயார் வீட்டுக் கிணற்றில் உடுப்பு துவைத்துக்கொண்டு இருந்துள்ளார். அப்போது எதிர்பாராதவிதமாக சிறுவன் வீட்டுக்கு முன்பாகவுள்ள, இரணைமடு நீர்ப்பாசன வாய்க்காலில் வீழ்ந்துள்ளான். சிறுபோகத்துக்காக திறந்து விடப்பட்டதால் அந்த வாய்க்காலில் அதிகளவு நீர் காணப்பட்டது. சிறுவனைக் காணாத நிலையில் தாயார் தேடிய போது, வீட்டிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் வாய்க்காலில் சடலமாக சிறுவன் மீட்கப்பட்டுள்ளான்.

வவுனியாவில் மூன்று வயதுச் சிறுமி ஒருவர் நீர்தொட்டியில் மூழ்கி நேற்றுமுன்தினம் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-113-214)

## லாப்ஸ்...

விநியோகம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. லிட்ரோ நிறுவனம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எரிவாயு விநியோகம் இடம்பெறும் என்று தெரிவித்துள்ளது.

லாப்ஸ் நிறுவனத்துக்கு எரிவாயுவை கொண்டு வரும் கப்பல் நாட்டை நேற்று வந்தடைந்தது. கப்பலில் 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு கொண்டு வரப்பட்டுள்ளதாக லாப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - 2 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையிலிருந்து விநியோகம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- 12.5 கிலோ கிராம் லாப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 6 ஆயிரம் ரூபாவை விட அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது.

(அ-ஒ-இ)

## கட்டுப்பாட்டை...

ஓமந்தை பகுதியிலிருந்து வந்த பாரவூர்தி கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது மோதியதோடு, அருகில் அமைந்துள்ள புதிய வர்த்தகக் கட்டடத் தொகுதியையும் இடித்துக்கொண்டு புகுந்தது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் உயிரிழந்ததோடு, மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - வவுனியா மாவட்டத்தில் கடந்த 3 நாள்களில் 8 அகால மரணங்கள் பதிவாகியுள்ளன. (அ-ஒ-110)

## வரி...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரச் சிக்கல், பண வீக்கம், வாழ்க்கைச் செலவோடு ஒப்பிடும்போது, வரி அதிகரிப்பானது, மக்களுக்கு மேலதிக சுமையாகவே இருக்கும். வாழ்க்கைச் செலவு 300 மடங்கு அதிகரித்துள்ளது. பொருள்களுக்குத் தட்டுப்பாடு, மாதாந்தம் சம்பளம் பெறுகின்றவர்களுக்கு அவர்களின் வருமானம் அதிகரிக்கவில்லை. அன்றாடத் தொழில் செய்பவர்களுக்கு வருமானம் இல்லை.

பெரும்பாலான வணிக நிறுவனங்கள் தங்களுடைய வியாபார நடவடிக்கைகளை மூடியுள்ளனர். இலாபத்தை எட்டுவதை விட, செலவைக் கூட ஈடு செய்ய முடியாத நிலைமையில் பல நிறுவனங்கள் இருக்கின்றன.

நிதிப்பற்றாக்குறையை தீர்த்துக் கொள்ளவே அரசாங்கம் வரியை அதிகரிக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வரி அதிகரிப்பானது, இலங்கை மக்களை பட்டினி சாவுக்குக் கொண்டு செல்லும்.

பொருள்களின் விலைகள் மீண்டும் 60 - 70 சதவிகிதம் அதிகரிக்கும். வரி விதிப்பை வர்த்தகர்கள், பொருள்களை கொள்வனவு செய்யும் மக்கள் மீதே சுமத்துவார்களே தவிர, அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கம் மக்கள்மீது இந்தச் சுமையை சுமத்துகின்றது. வரி அதிகரிப்பு மாத்திரம் அல்லாமல், சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக்கொண்டால், அந்தக் கடனைச் செலுத்தும் சுமையும் மக்கள் மீதே சுமத்தப்படும். ஆகவே இலங்கை தொடர்ந்தும் கடன் நச்சு வட்டத்துக்குள் சுழல்வதற்கும் வருமான பற்றாக்குறை நச்சு வட்டத்துக்குள் சுழல்வதற்கும் இது காரணமாக இருக்கும். மேன்மேலும் மக்களை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளுவதன் ஊடாக, மக்களை பட்டினிச் சாவு நிலைமைக்குக் கொண்டு செல்ல இது வழி வகுக்கும் - என்றார். (அ-ஒ-இ)

## இலங்கைக்கு...

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று சென்னையிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

கடந்த 2011 ஆம் ஆண்டின் பின்னர் புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் தமிழக முதலமைச்சரை சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

'இந்திய - இலங்கை தூதரகங்களுக்கான ஒன்றிணைந்த தேசிய உத்தி' என்ற கொள்கை செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தின் ஓரங்கமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இலங்கை பெரும் பொருளாதாரநெருக்கடிக்குமுகங்கொடுத்திருக்கும் நிலையில், அதனைக் கையாள்வதற்கு 2 பில்லியன் ரூபா பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்கியமைக்காக மிலிந்த மொறகொட தமிழக முதலமைச்சருக்கும், தமிழக மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலின், இலங்கையின் தற்போதைய நிலை குறித்து தான் கவலையடைவதாகவும் அத்தியாவசியப்பொருள்களைக் கப்பலில் ஏற்றி, இலங்கைக்கு உடனடியாக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். அத்தியாவசியப்பொருள்கள் ஏற்றப்பட்ட இரண்டாவது கப்பல் அனுப்பிவைக்கப்படுவதற்குத் தயார்நிலையில் இருப்பதாகவும், மேலும் சில கப்பல்களை அனுப்பிவைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றுக்கு இடையில் நிலவும் மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் காணப்படுகின்ற புராதன காலத்தொடர்புகள், கலாசார மற்றும் பாரம்பரிய ஒருமைப்பாடுகள் மற்றும் அவற்றை மேலும் வலுப்படுத்தல் ஆகிய விடயங்கள் குறித்தும் இருதரப்பினரும் கலந்துரையாடினர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட முதலமைச்சர் ஸ்டாலின் திருவள்ளுவரின் உருவச்சிலையைப் பல்கலைக்கழகங்கள் போன்ற பொருத்தமான இடங்களில் நிறுவுவதற்கு இலங்கை விருப்பம் காண்பிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். அதனை ஏற்றுக்கொண்ட உயர்ஸ்தானிகர், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதியளித்தார்.

இதேவேளை- இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு, இலங்கைத் தூதுவர் அழைப்பு விடுத்தார். (அ-ஒ-இ)

## தொடர் திருட்டு...

கடந்த மாதம் உக்குளாங்குளம் பகுதியில் 4 வீடுகளிலும், பண்டாரிக்குளம் பகுதியில் 2 வீடுகளிலும், நெளுக்குளம் பகுதியில் ஒரு வீட்டிலும், கூமாங்குளம் பகுதியில் ஒரு வீட்டிலும், மகாறம்பைக்குளம் பகுதியில் ஒரு வீட்டிலும் என 9 இடங்களில் நகைகள், மோட்டார் சைக்கிள், சைக்கிள், இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்த வவுனியா பொலிஸார் மதகுவைத்தகுளம் பகுதியில் 32 வயதான இளைஞர், தேக்கவத்தைப் பகுதியில் 30 வயதான இளைஞர், 4 ஆம் கட்டைப் பகுதியில் 35 வயதான இளைஞர் ஆகியோரைக் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது அவர்களிடம் இருந்து 3 மோட்டார்கள், 8 சிலிண்டர்கள், ஜெனரேற்றர், தொலைக்காட்சி, கிறைண்டர், சைக்கிள், மோட்டார் சைக்கிள், மற்றும் தோடு, மூக்குத்தி, சங்கிலி அடங்கிய 2 பவுண் நகைகள் என்பன மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(அ-ஒ-14-18)

## ரிக்கெற்றுக்கள்...

போட்டிகளுக்கான அனைத்து ரிக்கெற்றுக்களும் நேற்று பிற்பகல் 3 மணிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதலாவது மற்றும் இரண்டாவது கிரிக்கெட் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும், எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமையும் இடம்பெறவுள்ளது.


இதற்கான ரிக்கெட் விற்பனை நேற்று மதியம் ஆரம்பித்து பிற்பகலுடன் முடிவுக்கு வந்துள்ளது. கிரிக்கெட் ரசிகர் நீண்ட வரிசையில் நின்று ரிக்கெற்றுக்களைக் கொள்வனவு செய்தனர்.

(அ-ஒ-இ)

# மரண அறிவித்தல்

மண்ணில்
02 . 02 . 1939

விண்ணில்
03 . 06 . 2022



## திரு. செல்லன் அப்புத்துரை

மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் அப்புத்துரை நேற்றுமுன்தினம் (03.06.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன் குஞ்சம்மாவின் மூத்தமகனும், வல்லிபுரம் சீதேவியின் அன்பு மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும், சிறீஸ்கரன் (ஆசிரியர் - யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி) (காணாமல் போனவர்), சிறீபாஸ்கரன் (ஜேர்மனி), சிறீரங்கராசா (இத்தாலி), அன்பரசி, சிறீஜெயாகரன் (கனடா), சிறீசுதாகரன் (லண்டன்), சிறீதயாகரன் (கனடா), சிறீவித்தியாகரன் (ஜேர்மனி), மதியரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மினி (ஆசிரியர் - யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), சத்தியேஸ்வரி (ஜேர்மனி), கலைச்செல்வி (இத்தாலி), ஜெயகாந்தன், ஜென்சி (கனடா), நித்தியாமதி (லண்டன்), தனுஸ்ரா (கனடா), சகானா (ஜேர்மனி), அஜந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பொன்னுத்துரை, இராசதுரை, செல்லத்துரை, துரைராசா (கனடா), துரைசிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான ஆச்சிமுத்து, செல்லமுத்து, ஐயாத்துரை, துரைமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாகித்தியன் (பிரதேச செயலகம், தென்மராட்சி), சாருப்பிரியன் (லண்டன்), சாதனா, சதுர்சன், சகானன் (ஜேர்மனி), தஸ்னா, அக்சரன் (இத்தாலி), சாருண்ஜா, சனோசிஜா (யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவிகள்), சாகித்தியா (லண்டன்), சமீரா, சகாஸ் (கனடா), சஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

(cs.45034) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை கற்கை நெறியின் புதிய பிரிவு நேற்று நல் லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகியுள்ளது.

இந்தக் கற்கைநெறி சனி, ஞாயிறுதினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் 8 மணி வரை நடைபெறுகின்றது. குறித்த வகுப்புகளில் 19 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கலந்துகொண்டு பயிற்சி பெற லாம். 3 மாதங்களைக் கொண்ட கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ம-14,23)


## ENGLISH CLASSES
G.C.E O/L தோற்றியவர்களுக்க
ஆங்கிலம் பேசவைக்கும்
G.C.E A/L GENERAL
ENGLISH - G.C.E. O/L LITERATURE
K.Ganesh B.A 077 766 8725

## வீடு வாடகைக்கு தேவை
சங்கானை,சுழிபுரம் பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.
077 034 6838

## வேலையாள் தேவை
குழந்தை பராமரிப்பிற்கு
ஆள் தேவை. (cs 45029) (2.6)
077 146 7782, 077 117 3275

## ICT CLASSES
தரம் 06 முதல் A/L வரையான வகுப்புக்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும். (CS.45035) (3/6)
தொடர்பு : 074 264 0468

## திருமாங்கல்யம் திருமண சேவை
வெளிநாட்டு வரன்களை எதிர்பார்க்கும் படித்த பெண்கள் தேவை. உள்நாட்டில் தனியார் துறையில் பணிபுரியும் மணமக்கள் தேவை.
thirumaangalyam.com
077 120 4651, 021 728 4433

## வீடு விற்பனைக்கு
கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் மூன்று பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
076 790 9387 (CS.45040)(3/6)

## Canada Work Visa 2022 & 2023
1. Business management 2. Hospitality 3. Visual Arts 4. Medical & Health Care
- Other categories
Baker, Plumber, Cook, Hairstylist, Electrician, Welder, Painter, Tile setter and etc...
- Minimum Qualifications - A/L No need IELTS

Visa Consultant :
134 Adiyapatham Road, Thirunelvely, Jaffna T.P 0770385584
Email Id: naltejaffna@gmail.com

## யாழ் STS வைத்தியசாலை பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான தகுந்த ஊழியர்களை எதிர் பார்க்கிறது :
* வரவேற்பாளர் * வைத்திய உதவியாளர்
* காசாளர் * களஞ்சிய உதவியாளர்

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் மேலதிக அனுகூலங்களும் வழங்கப்படும்.
யாழ் நகரை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் மட்டும் 09/06/2022 அன்று காலை 9.30 மணிக்கு சமுகமளிக்கவும்.
மேலதிக தொடர்புகளுக்கு : 077 120 3763 (cs.45037) (2.6)

## மரத்தளபாடம் விற்பனைக்கு
பாவித்த கட்டில், கதிரை, மேசை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 026 4070 (Cs 45027) (2.6)

## வேலையாட்கள் தேவை
நெல்லியடியில் இயங்கும் விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. சம்பளம் 20,000/- - 25,000/- வரை வழங்கப்படும்.
074 288 5023

## வேலை ஆள்கள் தேவை
யாழ் நகருக்கு அருகில் யாழ் பிரதான வீதியில் இயங்கும் பதிவு செய்யப்பட்ட இறக்குமதி நிறுவனத்திற்கு பெண் விற்பனைப் பிரதிநிதி தேவை.
077 117 4954 (CS.45023) (3/6)

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு
நிலப்பரப்பு
- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு: ஜெயம்
077 814 7389, 077 241 7589

## கடை வாடகைக்கு
யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் கடை வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு
077 987 6922
070 787 6922

## விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசிய, மாவட்ட முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்
A/L 2024
தொழினுட்பப் பிரிவு வர்த்தகப் பிரிவு
கலைப் பிரிவு மாணவர்களுக்கு...
யாழ் குடாவின் பிரபல ஆசிரியர்களின் ஒன்றிணைந்த கற்பித்தலில்
புதிய பிரிவு ஆரம்பம் யூன் 12 காலை 9.01மணிக்கு
இன்றிலிருந்து அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்
மேலதிக விபரங்களுக்கும் மற்றும் பதிவுகளுக்கும்:-
077 248 7774 / 076 552 9093 / 021 221 7860

## வேலையாள்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கி வரும் புடைவைக் கடைக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் வசிப்போர் விரும்பத்தக்கது.
077 172 3554

## வேலை வாய்ப்பு
விற்பனைப் பிரதி நிதி (Sales Man) ஆண். பெண் இருபாலாரும் தேவை. தங்கி நின்று வேலை செய்யலாம்.
45, 000 - 60, 000 வரை பெறலாம்
076 624 7387, 077 998 9533

## வேலைவாய்ப்பு
நல்லூரில் இயங்கும் பெண்களின் ஆடை விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை.
JAS Fashion
710, Point Pedro Road, Nallur,Jaffna.
076 336 5885, 076 105 3308

## ALLIANCE FRANCAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு தகுதியானவர்களிடமிருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
1). வரவேற்பாளர்கள் Receptionist
2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் Marketing Executive
3). கணினி தொழிநுட்பவியலாளர் IT Technician

தகுதியானவர்கள் 06.06.2022 (திங்கட்கிழமை) முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை
யாழ்நகரை அண்மித்த பகுதியிலிருந்து Basic Computer, Basic English Basic Graphic Design அறிவுடைய பெண் வேலையாள்கள் தேவை.
077 353 3809, 077 353 7338

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✓ நன்னீரூற்று
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டு நிலம் கைதடி சந்தி 500 M தூரம்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை 3 லட்சம்
- பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை

தொடர்பு: 077 62 34 204
077 28 80 152
076 65 83 621 (CS 1127) 1-6

## வீடு வாடகைக்கு தேவை
யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு இயங்கும் தொண்டு நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக தேவைகளுக்காக யாழ்நகர் அல்லது நல்லூர் பகுதியில் அமைதியான சூழலில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை.
தொடர்பு: 077 919 1529




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவோமோ நாங்கள்
ஆறுமுகன் தஞ்சமெடி கிளியே.
—யோகர் சுவாமி

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 வைகாசி 22 ஞாயிற்றுக்கிழமை (05.06.2022) சிகரம் : 102


○ அ.நிக்ஸன்

# ரணிலின் எதிர்காலமும் 21 திருத்த நகல் வரைவும்



## தோற்கப்போவது சிங்கள அரசியல் தலைவர்களா? மக்களா?

ரணில்விக்கிரமசிங்கபிரதமராகப் பதவியேற்றபோது, அமைதி காத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின்மூத்த உறுப்பினர்கள், தற்போது ரணில் விக்கிரமசிங்கவை அமைச்சரவைக்குள்ளேயே விமர்சிக்க ஆரம்பித்துவிட்டனர். இலங்கைக்கு நிதி வழங்க வேண்டுமானால், அரசியல் ஸ்திரத்தன்மையும், (Political Stability) உறுதியான பொருளாதாரத் திட்டங்களையும் (Stable economic mechanism) முன்மொழிய வேண்டுமென உலகவங்கி, சர்வதேசநாணய நிதியம் உள்ளிட்ட நிதி வழங்கும் நிறுவனங்கள் கடும் அழுத்தங்கள் கொடுத்து வரும் நிலையில், மீண்டும் அரசியல் குழப்பங்களை உருவாக்கும் அரசியல் கைங்கரியங்கள் ஆரம்பித்துவிட்டனபோலும். இது தொடர்பில், அமெரிக்க-இந்திய அரசுகளும் கடும் அழுத்தங்கள் கொடுத்துவரும் நிலையில், உறுதியான அரசியல் நிலைப்பாடு அதாவது உறுதியான அரசாங்கம் இன்னமும் உருவாகவில்லை. இந்தவொரு நிலையில், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் சில அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்குப் பாரப்படுத்தும் 21 ஆவது திருத்தச் சட்டத்துக்கான நகல் வரைவு தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சாதகமான நிலைப்பாட்டை இதுவரை வெளியிடவில்லை. முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களே வெளியிடப்படுகின்றன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச ஆகியோரை மையப்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து, விலகி சுயாதீனமாகச் செயற்பட்ட நாற்பது உறுப்பினர்களும், மே மாதம் ஒன்பதாம் திகதி கொழும்பில் இடம்பெற்ற வன்முறையின் பின்னரானதொரு சூழலில், ராஜபக்ச குடும்பத்துடன் மீண்டும் மறைமுகமென்போக்கு அரசியல்நகர்வைக் கையாண்டு வருகின்றனர் என்பது கண்கூடு. குறிப்பாக முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு ஆதரவான உறுப்பினர்கள், அவருடன் முரண்பட்ட உறுப்பினர்கள் எனப் பலரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்ற அடிப்படையில் இயங்க மறுத்தாலும், தமது அரசாங்கம் என்ற நிலைப்பாட்டில் முரண்பாட்டில் ஓர் உடன்பாடாகச் செயற்பட ஆரம்பித்திருப்பதைச் சமீபகால நகர்வுகள் மூலம் அவதானிக்க முடிகின்றது.

இதன் பின்னணியில் 21 ஆவது திருத்தத்துக்கான நகல் வரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேறுவதற்குரிய சந்தர்ப்பங்கள் குறைவடைந்துள்ளன. அத்துடன் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கிய ஆகியவற்றின் நிதியுதவிகளும் உடனடியாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளும் அரிதாகியுள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாகப்பிரதமரைப்பதவிநீக்கும்அதிகாரம், ஜனாதிபதிக்கு இருக்கவேண்டும் என்றும், பாதுகாப்பு அமைச்சுஉள்ளிட்டசிலமுக்கியமானஅமைச்சுப்பொறுப்புக்களை ஜனாதிபதி வைத்திருப்பதற்குரிய ஏற்பாடுகள் 21 ஆவது திருத்தத்தில் இருக்கவேண்டுமெனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அழுத்தம் கொடுக்கின்றனர். கோத்தாபய ராஜபக்சவுக்கு நெருக்கமான உறுப்பினர்களே ஜனாதிபதியின் அதிகாரங்களைத் தொடர்ந்து பேண வேண்டிய அவசியம் குறித்த யோசனையை முன்வைக்கின்றனர். கோத்தாபய ராஜபக்சவுடன் முரண்பட்டுச் சுயாதீனமாக இயங்கிவரும் உறுப்பினர்களும் அந்த யோசனைக்கு ஆதரவுதெரிவித்திருக்கின்றனர். இதனாலேயே 21 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறுவது பற்றிய சந்தேகங்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் ஒன்பது சிறிய கட்சிகள் '21' தொடர்பானதமதுயோசனைகளைமுன்வைத்திருப்பதும், மேலும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமேயில்லை. ஆகவே நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தலைமையிலான குழுவினர் தயாரித்த நகல் வரைவை, முற்று முழுதாகத் திருத்தம் செய்யப்பட வேண்டியதொரு கட்டாயச் சூழல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டுள்ளது.

விஜயதாச ராஜபக்ச தயாரித்த நகல் வரைவில் இருக்கும் பரிந்துரைகளில், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்கள் சிலவற்றை நாடாளுமன்றத்துக்குப் பாரப்படுத்தும் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனாலும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், அந்தப் பரிந்துரைகள்கூடப் போதுமானதல்ல என்றும், ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் குறைக்க வேண்டுமென்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. அத்துடன் 4 அம்சக் கோரிக்கை ஒன்றையும் சட்டத்தரணிகள் சங்கம் ரணில் மற்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் பரிந்துரைத்திருந்தது. இதன் பின்னணியில் தற்போது ஒன்பது அரசியல் கட்சிகள் தமது யோசனைகளையும் முன்வைத்திருப்பது, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவைக்குப் பெரும் தலையிடியாகும். சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், ஜனாதிபதியின் அதிகாரங்களை 19 ஆவதுதிருத்தச்சட்டத்தில் இருந்ததுபோன்று 21ஆவது திருத்தச் சட்டத்தில் மீண்டும் கொண்டுவர வேண்டுமென வலியுத்தியுள்ளது. ஜே.வி.பியும் அதே நிலைப்பாட்டில் தான் உள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமெனக் கூறினாலும், அது பற்றி பெரிதாக அலட்டிக்கொள்வதாக இல்லை. இனப்பிரச்சினைக்கு நிரந்த அரசியல் தீர்வை முன்வைக்காமல், '21' பற்றிப் பேசுவதில் பயனில்லை என்றதொனியில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கருத்திட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க தனித்து நின்று '21' ஐ எப்படிக் கொண்டுவரப் போகின்றார் என்பதே கேள்வி. அதாவது ரணில் தலைமையிலான அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பலர், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு முழுமையான ஆதரவைத் தெரிவிக்காத அல்லது கோத்தா, பஸில் ஆகியோருடனான உறவை முற்றாகக் கைவிடாதவொரு சூழலில், '21' ஐ விஜயதாஸ ராஜபக்ச என்ற தனிமனிதனின் ஆதரவை மாத்திரம் வைத்துக் கொண்டு ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு நிறைவேற்றப் போகின்றார் என்ற கேள்வி யதார்த்தமானதே.

### 9 கட்சிகளின் யோசனைகள்

- ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் ஏனைய நாடுகளுடன் செய்யும் இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒப்பந்தங்கள் நாடாளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். நாடாளுமன்றத்தின் கண்காணிப்பின் முழு அரச நிர்வாகமும் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.
- பாதுகாப்பு அமைச்சைத்தவிர ஏனைய எந்த அமைச்சுப் பொறுப்புக்களையும் ஜனாதிபதி வகிக்கக் கூடாது – என்று நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் ஒன்பது அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து யோசனைகளை முன்வைத்தி ருக்கின்றன. நீதியமைச்சர் விஜயதாஸராஜபக்சவிடம் தமது கோரிக்கைகளை இந்தக் கட்சிகள் முன்வைத்துள்ளன. தமது யோசனைகளையும் உள்ளடக்கித் தயாரிக்கப்படும் நகல் வரைவை உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பதற்கு இலங்கைத்தீவில் வாழும் அனைத்து மக்களும் ஒருமாதகால அவகாசம் வழங்க வேண்டுமெனவும் தமது கோரிக்கையில் ஒன்பது கட்சிகளும் வலியுறுத்தியுள்ளன.
- அரச நிறுவனத்தின் கட்டமைப்பை மாற்றம் செய்யும் போது அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும், துறைமுகம், விமான நிலையம் ஆகிய தேசிய வளங்களின் முதலீடுகள் மற்றும் ஒப்பந்தங்கள் தேசிய பெறுகை ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்டு அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவேண்டும். தேசிய பாதுகாப்பு சபையின் உறுப்பினராக பிரதமர் பதவி வகிக்க வேண்டும், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைத் தன்வசம் வைத்திருக்க நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும்.
- பிரதமர் உட்பட எதிர்க்கட்சி தலைவர் அரசியலமைப்பு சபைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை தவிர்த்து ஏனையோரைத் தெரிவு செய்யும் போது, இலங்கை வர்த்தக சபையினால் பெயர் குறிப்பிடப்படும் வர்த்தகர் அல்லது நிறுவனப் பணிப்பாளர், தொழிற் சங்கத்தினால் பெயர் குறிப்பிடப்படும் நிபுணர், பல்கலைக்கழக வேந்தர்கள் ஒன்றியத்தின் பரிந்துரைக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறிப்பி டப்படும் ஒருவர் என்ற அடிப்படையில் அந்த மூன்று பேர் தெரிவு செய்யப்பட வேண்டும்.
- மேல்நீதிமன்றத்துக்கு நீதிபதிகளை நியமிக்கும் போது. அதற்குரிய பரிந்துரைகள், ஆணைக்குழு உறுப்பினர்களினால் உரிய முறையிலும் தகுதி அடிப்படையிலும் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் குறித்த நகல் வரைவில் உள்ள 44(1), 44(2), 45(1), 45(2), மற்றும் 46(1), 50(1) ஆகிய திருத்த யோசனைகளில் 'பிரதமரின் ஆலோசனைக்கமைய' என்பதற்குப் பதிலாக 'பிரதமரின் எழுத்துமூல இணக்கப்பாடு 'எனத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

என்றும்யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ நிலாந்தன்



# கோத்தா கோகமவின் 50ஆவது நாளும் தமிழ் அம்மாக்களின் 1924ஆவது நாளும்

தேசிய மீனவர் ஒத்துழைப்பு சங்கம், ஸ்டாலின் தலைமையிலான இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் பிரிட்டோ பெர்னாண்டோ தலைமையிலான தெற்கில் 1980களில் காணாமற்போன குடும்ப அங்கத்தவர் சங்கம், நிமல்கா பெர்னாண்டோ தலைமையிலான தெற்கின் அன்னையர் சங்கம் மற்றும் விக்கிரமபாகு, சிறிதுங்க போன்றோர் எப்போதுமே சுயநிர்ணய உரிமை தமிழரின் தேசிய சிக்கல்கள் மற்றும் காணாமற் போனோர் , போர்க்குற்றங்கள் போன்றவை தொடர்பில் எப்போதுமே முற்போக்குக் கருத்துகளைக் கொண்டவர்கள்தான். இவர்கள் எல்லோரையும் எனக்கு பல ஆண்டுகளாகத் தெரியும்.
வெள்ளைவான் கடத்தல் கொலை காலத்திலிருந்து தெரியும். புதிய சிங்கள சமூகத்தை எப்படி உள்ளே கொண்டு வருவது என பார்க்கவேண்டும்.காலிமுகத்திடல் போராட்டத்தில் கணிசமாக செல்வாக்குச் செலுத்தும் குமார் குணரத்தினம் தலைமையிலான முன்னிலை சோஷலிசக் கட்சி, அனுரகுமார தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி ஆகியவை இன்னமும் இந்த மட்டத்துக்கும் வரவில்லை. முன்னிலை சோஷலிச கட்சியுடன் சமீபத்தில் நான் பேசியபோது, தமிழ்த் தேசிய நிலைப்பாடுகளைப் பற்றி, சமீப காலமாக நான் அதிகமாக பேசும் மதச்சார்பின்மை பற்றி குறிப்பாக பௌத்த தேரர்கள் பற்றி பேசியபோது, பதில் கூறாமல் புன்னகையுடன் என்னை பார்த்துக் கொண்டு இருந்தார்கள். எதிர்க்கருத்துக் கூறாமல் புன்னகை புரிய வைத்ததே எனது சாதனை என நினைத்துக்கொண்டேன்"
இது நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எனது கடந்த வார கட்டுரைக்குப் அனுப்பிய பதில். அவருடைய சம்மதத்தோடு அவருடைய மின்னஞ்சலில் ஒரு பகுதி இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

காலிமுகத்திடலில் போராடும் இளையோரின் பின்னணியில் முன்னிலை சோஷலிசக் கட்சியின் செல்வாக்குக்கு உட்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் செயற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜே.வி.பி.யின் மறைமுக மாணவர் அமைப்பு ஒன்றும், சம்பிக்க ரணவக்கவின் 43 ஆவது பிரிகேட் என்று அழைக்கப்படும் அமைப்பும் அங்கே பின்னணியில் இருப்பதாகத் தகவல்கள் உண்டு.இவைதவிர மத குருக்கள், செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள்,புத்திஜீவிகள்,கருத்துருவாக்கிகள்,ஊடகவியலாளர்கள் போன்றோரும் அங்கே காணப்படுகிறார்கள்.

தனியே ஒரு குறிப்பிட்ட அமைப்பின் முழுமையான செல்வாக்கு அங்கே இல்லை என்று தெரிகிறது. அங்கு காணப்படும் வெவ்வேறு கருத்து நிலைகளைக் கொண்ட அமைப்புகளும் தனிநபர்களும் தங்களுக்கு இடையே ஏதோ ஒரு பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு செயற்படுவதாக தெரிகிறது. அங்கு மைய அதிகாரம் என்று எதுவும் கிடையாது. ஆனால் அங்கே காணப்படும் செயற்பாட்டு அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட செயற்பாட்டாளர்களுக்கு இடையே ஏதோ ஒரு செயல்பூர்வ இணைப்பு உண்டு. இது கிட்டதட்ட இன்டர்நெற் வலைப் பின்னலோடு ஒப்பிடத்தக்கது. இன்டர்நெற்றுக்கு மைய அதிகாரம் இல்லை என்றும் கூறுவார்கள். சமூக வலைத்தளங்களின் எழுச்சிக்குப் பின் உலகம் முழுதும் இடம் பெறும் தன்னெழுச்சிப் போராட்டங்களில் போராடும் அமைப்புக்களுக்கிடையேயான பிணைப்பு ஏறக்குறைய இன்டர்நெற் பண்பு பொருந்தியதாகக் காணப்படுவது பொதுவாக அவதானிக்கப்பட்டிருக்கிறது. கோத்தா கோகமவிலும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு. அதில் முன்னிலை சோஷலிசக் கட்சியின் பங்கு எந்தளவுக்கு உண்டு என்பது குறித்து சிங்கள பிரதான ஊடகங்கள் அதிகளவு தகவல்களை ஏற்கனவே வெளியே கொண்டு வந்து விட்டன. ஆனால் தமிழ் ஊடகப் பரப்பில் மிகக் குறைந்த அளவே அது தொடர்பான விவரங்கள் வெளியே வந்திருக்கின்றன.

அண்மையில் முன்னிலை சோஷலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரத்தினத்தை தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் நேர்கண்டார். கோத்தா கோகம போராட்டத்தின் பின்னணியில் இருப்பதாக சந்தேகிக்கப்படும் ஒரு கட்சியின் பொதுச் செயலாளரை தமிழில் பேட்டி கண்ட ஒரே ஒரு காணொலி அது. ஆனால் அந்தக்காணொலியை 160 க்கும் குறைவான தொகையினர்தான் இதுவரையிலும் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இலங்கைத் தீவில் உல்லாசப்பயணிகள் சாப்பிடும் பாணை உள்ளூர் மக்கள் பறித்துக் கொண்டு செல்கிறார்கள் என்ற அர்த்தத்தில் ஒரு இந்திய யூடியூபர் வெளியிட்ட காணொலி கிட்டத்தட்ட ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டவர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது. இப்படித்தான் சவுக்கு சங்கர் ஒரு தமிழக ஊடகவியலாளரை நேர்கண்ட காணொலியும் இலட்சக்கணக்கில் பார்க்கப்பட்டிருக்கிறது. அந்தக்காணொலி விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்பானது. இதுபோன்ற காணொலிகளில் ஓர் உண்மை பல பொய்களால் சோடிக்கப்படுகிறது.பார்வையாளர்களைக் கவர்வதற்காக,பரபரப்புக்காக தகவல்கள் இட்டுக்கட்டப்படுகின்றன. ஆனால் அதிக தொகை பார்வையாளர்கள் அப்படிப்பட்ட காணொலிகளைத்தான் விரும்பி பார்க்கிறார்கள்.சீரியசானதும் தேவையானதும் ஆகிய காணொலிகள் குறைந்த அளவுக்கே பார்க்கப்படுகின்றன.தமிழில் புத்திசாலித்தனத்துக்கும் ஜனரஞ்சகத்துக்கும் இடையிலுள்ள பாரதூரமான, தோல்விகரமான இடைவெளியை அது காட்டுகிறது.



சில வாரங்களுக்கு முன் பி.பி.சி தமிழோசையின் சென்னை நிருபர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். அவர் என்னை நேர்கண்டபொழுது ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார் "நாங்கள் தமிழகத்திலிருந்து பெருந்தொகை பணத்தைச் செலவழித்து இங்கே வருகிறோம். ஆனால் இந்தக் காணொலியை ஐம்பதினாயிரத்துக்கும் குறைவானவர்களே பார்க்கப்போகிறார்கள். ஆனால் என் வீட்டின் அறையொன்றில் ஒரு கமராவின் முன் அமர்ந்திருந்து கற்பனை செய்பவரின் காணொலி பல லட்சம் பேர்களால் பார்க்கப்படுகிறது" என்று.
இப்படிப்பட்டதொரு தமிழ் யூடியூப் சூழலில், குமார் குணரத்தினத்தின் காணொலிக்கு மீண்டும் வருவோம்.அக்காணொலியில் அவர் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஒரு தீர்வு என்று கூறுவதைத் தவிர்க்கிறார். மாறாக தமிழ்,சிங்கள,முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் இணைந்து ஒரு தீர்வுக்காக உழைக்க வேண்டும் என்று பொத்தாம் பொதுவாக கூறுகிறார்.ஒற்றையாட்சிக்கு எதிராக கருத்துக் கூறுவதைத் தவிர்க்கிறார்.அவர் தலைமை தாங்கும் ஒரு கட்சிதான் காலிமுகத்திடலில் அதிகம் செல்வாக்குச் செலுத்துகிறது என்று எடுத்துக்கொண்டால் கோத்தாகோகம கிராமம் தொடர்பாக தமிழ் மக்கள் எப்படிப்பட்ட ஒரு நிலைப்பாட்டை எடுப்பது? இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் மேற்கோள்காட்டப்பட்ட மனோ கணேசனின் [illegible] வேண்டும்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்னிலங்கையிலிருந்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு சந்திப்பின்போது தமிழ் மக்கள் தரப்பிலிருந்து பலரும் கருத்து தெரிவித்தார்கள். குறிப்பாக தென்னிலங்கையில் இடம்பெறும் போராட்டங்கள் தொடர்பில் ஏன் தமிழ் மக்கள் விலகி நின்று பார்க்கிறார்கள் என்பதற்கு அங்கே விளக்கங்கள் கூறப்பட்டன.தென்னிலங்கையில் இருந்து வந்தவர்கள் எல்லாவற்றையும் ஆர்வத்தோடு கேட்டார்கள்.அதில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளும் தொழிற்சங்கங்களும் காணப்பட்டன. எனினும் தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக்கொண்டு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்களுக்கு ஒரு தீர்வை வழங்க வேண்டும் என்ற விடயத்தில் ஒருமித்த கருத்தை அடைவதற்கு மேலும் பயணிக்க வேண்டும் என்பதனை அந்தச்சந்திப்பு உணர்த்தியது.
இது காலிமுகத்திடலுக்கும் பொருந்தும். ரணில் விக்கிரமசிங்க பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டதும் அங்கே நடந்த ஊடகச் சந்திப்பில் எட்டு அம்ச கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அந்த எட்டு அம்சங்களில் எதிலும் சிறிய தேசிய இனங்கள் தொடர்பான எந்த ஒரு கோரிக்கையும் காணப்படவில்லை.பொத்தாம் பொதுவாக அடிப்படை உரிமைகள் என்ற ஒரு கோரிக்கை காணப்பட்டது. முன்னிலை சோஷலிசக் கட்சியின் குமார் குணரத்தினமும் அப்படித்தான் அடிப்படை உரிமைகள் பற்றி பேசுகிறார். தமிழ் மக்கள் அடிப்படை உரிமைகளை மட்டும் கேட்கவில்லை.தனிநபர் உரிமைகளை மட்டும் கேட்கவில்லை.கூட்டு உரிமைகளையும் கேட்கிறார்கள். ஒரு தேசிய இனமாக தங்களுடைய கூட்டு உரிமைகளை அதாவது அரசியல் உரிமைகளைக் கேட்கிறார்கள்.தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக்கொண்டு ஒரு தேசிய இனத்துக்குள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். கோத்தா கோகமவில் இருப்பவர்களில் ஒரு சிறு தொகையினர்தான் அவ்வாறான ஒரு தீர்வுக்குத் தயாராகக் காணப்படுகிறார்கள். தமிழ்மக்களுக்கு நடந்தது இனப்படுகொலை என்பதனை ஏற்றுக் கொள்வதற்கும் அந்த சிறியபகுதியினர் தயார். பெரும்பான்மை தயாராக இல்லை.

கோத்தா கோகம கிராமம் எனப்படுவது சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் அரசுக்கு எதிரான உணர்வுகளின் வெளிப்பாட்டு மையமாக காணப்படுகிறது. அந்த அடிப்படையில் அது முற்போக்கானது. அதேசமயம் அந்தக்கிராமத்தின் தமிழ் மக்கள் தொடர்பான நிலைப்பாடுகளோடு தமிழ்மக்கள் முழு அளவுக்கு உடன்பட முடியாது.கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வந்த தொழிற்சங்கங்கள் மத்தியிலும் அவ்வாறான கருத்து காணப்பட்டது. காலிமுகத்திடல் போராட்டத்தை தோற்கவிடக்கூடாது என்ற ஒரு பொது உணர்வு அவர்கள் எல்லோர் மத்தியிலும் காணப்பட்டது.ஆனால் அதற்காக அந்தக்கிராமத்தின் அரசியல் நிலைப்பாடுகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

கடந்த 28ஆம் திகதி கோத்தா கோகம உருவாக்கப்பட்டு 50ஆவது நாள் வந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்குப்பின் அந்தக்கிராமத்தில் கூடுபவர்களின் எண்ணிக்கை குறைந்துவருவதாக ஒரு அவதானிப்பு உண்டு. கிராமத்தில் முன்பு காணப்பட்ட எழுச்சி இப்பொழுது இல்லை என்றும் ஒரு அவதானிப்பு உண்டு. கிராமத்தில் காணப்படும் செயற்பாட்டாளர்கள் மத்தியில் முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகவும் அறியமுடிகிறது. இவ்வாறான ஒரு பின்னணியில் கோத்தாகோகம கிராமத்தின் 50 ஆவது நாளை முன்னிட்டு தொழிற்சங்கங்கள் அந்தக்கிராமத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத்தின.

(07 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடைசியில் வென்ற கப்டன்!



கோகுல் பிரசாத்

கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்த ஜொனி டீப் - ஆம்பர் ஹெர்ட் மான நஷ்ட வழக்கு முடிவுக்கு வந்திருக்கிறது. ஜொனி டீப் என்று சொன்னால் பலருக்கும் அவரைத் தெரியாது. ஆனால் 'கரீபியன் ஒஃப் பைரேட்ஸ்' பட நாயகன் 'கப்டன் ஜாக் ஸ்ப்ரோ' என்றால் சட்டெனத் தெரிந்துவிடும். கடற்கொள்ளையனாக திரையில் அசத்திய அந்தக் கலைஞனின் வாழ்க்கை அவ்வளவு இனிப்பாக இருக்கவில்லை. அவருக்கும், அவரது மனைவி ஆம்பர் ஹெர்ட்டுக்கும் இடையேயான முரண்பாடு விவகாரத்து வரை சென்றது. அதன் பின்னும் அவரது முன்னாள் மனைவி விடுவதாயில்லை. ஜொனியைப் பற்றி மிக மோசமாக லண்டனில் இருந்து வெளியாகும் 'தி சன் ' பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரையால், 'கரீபியன் ஒஃப் பைரேட்ஸ்'படத்தின் கடைசிப் பாகத்தில் நடிக்கும் வாய்ப்பையும் ஜொனி டீப் இழந்தார். இந்த நிலையில், அதுவரை பொறுமை காத்த ஜொனி டீப் பொங்கியெழுந்தார். தனக்கு அவதூறு உண்டாக்கிய தன் முன்னாள் மனைவி மீது மானநஷ்ட வழக்குத் தொடர்ந்தார். ஆனாலும் ஆம்பரும் அசரவில்லை. அவரும் பணத்தை வாரியிறைத்து வழக்கை எதிர்கொண்டார். பணத்துக்கு இப்போது ஆம்பருக்கு அவ்வளவு கஷ்டமில்லை. ஏனெனில் உலகப் பணக்காரரான எலான் மஸ்கின் ரகசியக் காதலிகளில் ஆம்பரும் ஒருவர். சரி, இப்போது வழக்குக்கு வருவோம்.

ஆம்பர் ஹெர்ட் மீதே மேலதிகத் தவறு உள்ளது என்றும் ஜொனி டீப் குறித்து அவர் எழுதிய சர்ச்சைக்குரிய கட்டுரையானது ஆதாரமற்ற அவதூறுகளைச் சுமத்தி களங்கம் விளைவிக்கும் உள்நோக்கங்களைக் கொண்டது என்றும் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். ஜொனி டீப் சார்பில் ஐம்பது மில்லியன் டொலர் நஷ்ட ஈடு கேட்டு தொடரப்பட்ட வழக்கில் ஹெர்டைப் பதினைந்து மில்லியன் டொலரை வழங்கச்சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். இவ்வழக்குக்கு எதிராக நூறு மில்லியன் டொலர் கோரி எதிர் மானநஷ்ட வழக்கு தொடர்ந்த ஆம்பர் ஹெர்டுக்கு ஜொனி டீப் இரண்டு மில்லியன் டொலர் கொடுக்க வேண்டும். ஏழு பேர் கொண்ட அறங்கூறாயக் குழு (ஐந்து ஆண்கள், இரண்டு பெண்கள்) இந்தத்தீர்ப்பினை ஒருமனதாக முன்மொழிந்திருக்கிறது.

இந்தத்தீர்ப்பின் மூலம் சில விஷயங்கள் தெளி

**1** வழக்கு ஆரம்பித்த முதல் நாளிலிருந்தே சமூக ஊடகங்களில் ஜொனி டீப்புக்கு ஆதரவு குவிந்திருந்தது. "I Support Johnny Depp" 'ஹாஷ் டாக்கை' எண்பத்து ஐந்து மில்லியன்பேர் ட்ரெண்டிங் செய்தபோது ஆம்பர் ஹெர்டுக்கு வெறும் ஏழரை மில்லியன் மக்களே தங்கள் ஆதரவை நல்கியிருந்தனர். இதற்குக் காரணம் டீப்பின் நட்சத்திர அந்தஸ்தும் இரசிகப் பட்டாளமும் மட்டுமல்ல. ஆம்பர் ஹெர்டைப் பெருவாரியான மக்கள் நம்பவில்லை. அவர் தன்னைக் குடும்ப வன்முறையில் பாதிக்கப்பட்ட ஒருநபராக, போலியாக முன்னிறுத்தியது எடுபடவுமில்லை. இதுபோன்ற வழக்குகளில் காலங்காலமாகப் 'பாவப்பட்ட' பெண்களின் சார்பாகத் தீர்ப்பு வருவதே வழக்கம். இம்முறை அப்படி நடந்துவிடக்கூடாது என்பதில் எல்லோரும் உறுதிபடத் தீர்மானித்துச் செயற்பட்டது போலிருந்தது. ஏனெனில், பெண்களிலும் நிறைய "குடும்ப வன்முறையாளர்கள்' உண்டு என அழுத்தமாகச் சொல்வதற்கு இதுவொரு பொன்னான வாய்ப்பு. அதுவும் ஜொனி டீப் போன்ற உலகறிந்த பிரபலத்ணத்துக்கே இங்ஙனம் நிகழ்ந்திருக்கிறது எனும்போது இதைத் தவறவிட யாரும் தயாராக இல்லை. இவ்வழக்கை நேரலையில் ஒளிபரப்பியது இன்னும் பரந்துபட்ட மக்களைச் சென்றடைவதற்கு வசதியாகப் போய்விட்டது. இந்தளவுக்குச் சமூக ஊடகங்களின் கண்காணிப்பின் கீழ் நகர்த்திச் செல்லப்பட்ட வழக்கு சமீபத்தில் வேறில்லை என்றே சொல்லலாம்.

**2** தீர்ப்பைப் பொறுத்தவரை இவ்விருவரது குடும்ப உறவில் பரஸ்பர அவமதிப்பு தொடர்ந்து நிகழ்ந்திருக்கிறது என்பதை ஜூரி சபை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஜொனி டீப் அதை மறுக்கவில்லை. தான் வன்மையாக நடந்துகொண்டதை அவர் ஒப்புக்கொள்கிறார். ஆனால் தன்னை அவ்வாறு நடந்துகொள்ளத் தூண்டியது ஆம்பர் ஹெர்டின் மோசமான நடத்தையும் நுட்பமான உளவியற் சித்திரவதையும்தான் என்பதே டீப்பின் குற்றச்சாட்டு. தான் முதல்நிலை குற்றவாளி அல்ல, தான் செய்தது அத்தனையும் ஹெர்டின் தீவினைகளுக்கான எதிர்வினையே என்பது அவரது நிலைப்பாடு. நஷ்டஈடாக ஹெர்ட் பதினைந்து மில்லியன் டொலர் தர வேண்டும் என்றும் டீப் இரண்டு மில்லியன் டொலர் தர வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

**3** ஹெர்ட் சார்பில் ஏராளமான 'ஆதாயம் பெறும் சாட்சிகள்' கொண்டுவரப்பட்டனர். அதாவது, ஹெர்டுக்கு ஆதரவாகச் சாட்சி சொல்ல அழைத்து வரப்பட்டவர்களில் நிறையப் பேர் அவரது ஊழியர்கள், மனநல ஆலோசகர்கள், ஏதாவது ஒரு வகையில் ஹெர்டிடம் இருந்து ஊதியம் / பணம் பெற்றவர்கள், ஆதாயம் அடைந்தவர்கள். அதனால் அவர்களது சாட்சியங்களில் நம்பகத்தன்மை குறைவு. ஆனால் டீப் தரப்பில் நிறைய , பொதுவான சாட்சிகள் இருந்தனர். பொலிஸார், பொதுமக்கள் , முன்னாள் காதலி இப்படி நிறையப்பேர். டீப் சார்பாகத் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு இதுவும் முக்கியமான காரணம்.

**4** ஆம்பர்ஹெர்ட்சமர்ப்பித்த சில ஓடியோ ஆதாரங்கள் அவருக்கே எதிராகத் திரும்பின. ஓர் ஒலிப்பதிவில் இருவரும் கடுமையாகச் சண்டையிடுகிறார்கள். மேற்கொண்டு வாக்குவாதம் வளர்வதைத் தவிர்க்கும்பொருட்டு ஜொனி டீப் கழிப்பறைக்குச் சென்று தாழிட்டுக்கொள்கிறார். அங்கேயும் விடாமல் துரத்திச் சென்று டீப்பை வம்பிழுக்கும் ஆம்பர் ஹெர்ட், "சண்டை போடுவதில் இருந்து தப்பிக்கப் பார்க்கிறாய். நீயொரு கோழை" என வசைபாடுகிறார். "என்னை ஏன் இப்படி வதைக்கிறாய்?" என மன்றாடும் டீப்பிடம், "ஓ! வெளியே போய் சொல்லிப்பாரேன். மனைவி உன்னைச் சித்திரவதை செய்வதாகச் சொல்லித்தான் பாரேன். இந்த உலகம் ஒரு பெண் சொல்வதை நம்புமா,? இல்லை ஆண்கள் சொல்வதை நம்புமா?" என்று எகத்தாளமாகக் கேட்கிறார். இப்படியான ஒலிப்பதிவுகள் ஆம்பருக்கு எதிராகத் திரும்பின.

**5** ஆம்பர் ஹெர்ட் தொடர்ச்சியாகப் பொய்களைச் சொல்லி அவற்றைச் சமாளிக்க முடியாமல் திணறி நிறையத் தடவை கையும் களவுமாகப் பிடிபட்டார். டீப் தன்னைத் தாக்கியதாகவும் கன்னங்கள் வீங்கி உதடுகளில் இரத்தம் வழிய அவசர பொலிஸ் இலக்கமான '911'க்கு மூன்று முறை புகார் தந்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். அந்தப்புகார்களை விசாரிக்க அனுப்பப்பட்ட மூன்று பொலிஸ் அதிகாரிகளும் அந்தச் சமயத்தில் ஹெர்டின் முகத்தில் காயங்கள் எதையும் பார்க்கவில்லை எனச் சொல்லிவிட்டனர். அதன் பின்னர் டீப் அடித்ததால் ஏற்பட்ட காயங்களை மறைக்க மிலானி நிறுவனத்தின் குறிப்பிட்ட ஒப்பனை சாதனத்தைப் பயன்படுத்தியதாக ஹெர்ட் தெரிவித்தார். ஆனால், இந்தச் சம்பவங்கள் நடந்தபோது அந்தச் சாதனம் சந்தைக்கே வந்திருக்கவில்லை என மிலானி நிறுவனம் செய்தி அறிக்கை வெளியிட்டது.

**6** ஆம்பர் ஹெர்ட் தரப்பு சட்டத்தரணிகள், டீப்பின் வன்முறை இயல்பை நிறுவ முயன்றனர். அதுவும் தோல்வியில் முடிந்தது. ஹெர்ட் சாட்சியம் சொல்லும்போது டீப் தனது முன்னாள் காதலி கேட் மோஸைப் படிகளில் இருந்து தள்ளிவிட்டார் என்றும் இந்தச் சம்பவத்தைக் கேட் தன்னிடம் விவரித்திருக்கிறார் என்றும் ஆம்பர் கூறினார். டீப் தரப்பில் அழைத்து வரப்படவிருந்த சாட்சிகளின் பட்டியலில் கேட் மோஸின் பெயரே இல்லை. (கேட் பெயரை ஹெர்ட் உச்சரித்ததும் டீப்பின் சட்டத்தரணி மகிழ்ச்சியடைந்தார். இன்னொரு ஆதரவுக் கரம்!). இப்போது வாய்தவறி ஹெர்ட் அவரது பெயரை உளறிவிட்டதால் ,கேட் மோஸைப் புதிய சாட்சியாகக் கூட்டி வந்தார்கள். வந்தவர், அப்படியொரு நிகழ்வு நடக்கவே இல்லை எனக் கைவிரித்துவிட்டார். இதைச் சாக்காக வைத்து ஹெர்டின் கடந்தகால அத்துமீறல்களையும் அவர் பங்கெடுத்த வன்முறைச் சம்பவங்களையும் டீப்பின் சட்டத்தரணிகள் குழு அடுக்கடுக்காக நீதிமன்றத்தில் நிறுவியது.

**7** உளவியல் நிபுணர்களின் துணையுடன் ஹெர்டின் சமநிலைக் குலைவுக்கான காரணங்களையும் மனநல பாதிப்புகளையும் டீப் தரப்பில் விரிவாக எடுத்துரைத்தனர்.

**8** டீப்புக்கும் தனக்குமான விவாகரத்தின் முடிவில் கிடைக்கும் ஜீவனாம்சத்தைக் குழந்தைகள் மருத்துவமனைக்கு அப்படியே கொடுத்துவிடப் போவதாக சில ஆண்டுகளுக்கு முன் ஹெர்ட் பீற்றியிருந்தார். முன்னாள் கணவனின் பணம் தனக்கு வேண்டாம், நற்காரியத்துக்காகப் பயன்படும் என்கிற ஒரே காரணத்திற்காகப் பணத்தைப் பெறுகிறேன், சொந்தக் காலில் நெஞ்சை நிமிர்த்தி நிற்பவள் (மணமுறிவின்போது சமந்தா சொன்ன அதே வார்த்தைகள்) என்பது அவர் அளித்த பேட்டியின் சாராம்சம். ஆனால், பதினான்கு மில்லியன் டொலரை ஜீவனாம்சமாக வாங்கியதோடல்லாமல் அதற்கான வரியையும் டீப்பே கட்ட வேண்டும், அப்போதுதான் மணமுறிவுக்குச் சம்மதிப்பேன் என ஹெர்ட் நிர்ப்பந்தித்ததை டீப்பின் நிதித் தணிக்கையாளர் வெளிப்படுத்தி ஹெர்டின் குட்டை உடைத்துவிட்டார். அது தொடர்பான ஆவணங்களையும் சமர்ப்பித்தார். (இன்றுவரை அதிலிருந்து ஒரு சதத்தைக்கூட குழந்தைகள் மருத்துவமனைக்கு ஹெர்ட் வழங்கவில்லை.) இந்த விஷயத்தில் நாம் டீப்பின் 'ஜென்டில்மேன்'தனத்தைக் கவனிக்க வேண்டும். ஊரெல்லாம் பொய் சொல்லியும் அவதூறுகளைப் பரப்பியும் தன்னை உலகின் முன் கூனிக்குறுக வைத்த, ஆம்பர் ஹெர்டை அவர் காட்டிக் கொடுக்கவே இல்லை. இந்த வழக்கு நடைபெற்றிருக்காவிட்டால் கடைசி வரை அமைதியாகவே அவர் இதைக் கடந்திருக்கக்கூடும்.

**9** 'தி சன்' பத்திரிகை மீது டீப் தொடர்ந்த அவதூறு வழக்கு (அந்தப் பத்திரிகையில்தான் டீப்பை "wifebeater"ஆகச் சித்தரிக்கும் கட்டுரையை ஹெர்ட் எழுதியிருந்தார்) லண்டனில் நடைபெற்றது. அது டீப்புக்குச் சாதகமாக முடியாததற்குக் காரணம் அந்த நாட்டின் சட்ட வரம்புகள் சில முக்கியமான சான்றுகளைச் சமர்ப்பிக்க டீப்புக்கு அனுமதி வழங்காததே எனச் சொன்னார்கள். இப்போது இந்தத்தீர்ப்பின் மூலம் அந்தக்கூற்றில் உண்மையிருப்பது புலனா புலனாகிறது.



இவ்வழக்கு ஒளிபரப்பான போது மிகவும் நொந்தது பெண்ணியவாதிகள் தரப்புதான். இப்படியா அம்பலப்படுவார் எனப் பதறினர். வழக்கு நடைபெறும்போதே தீர்ப்புகளை எழுதலாமா என வக்காலத்து வாங்க முயன்றனர். ஏனெனில் பெண்கள் கைக்கொள்கிற தந்திரோபாயங்களின், அரங்கேற்றுகிற நாடகங்களின், வெளிப்படுத்துகிற பாசாங்குகளின், நீலிக்கண்ணீரின், திறம்படப் பயன்படுத்துகிற அடிமட்ட உத்திகளின் ஸ்தூல வடிவமாகவே ஹெர்ட் செயல்பட்டார். அதை உலகம் பார்த்து நகைத்துக்கொண்டிருந்தது. இதில் ஆச்சரியமான விஷயம், ஆண்களைக் காட்டிலும் மேலதிக எண்ணிக்கையில் பெண்களே ஹெர்டுக்கு எதிராகக் களமாடினார்கள். அதற்கு டீப் மீதான மனமயக்கம் காரணமல்ல. இன்னொரு பெண்ணின் சாதுர்யங்களை அவர்களே உள்ளூர அறிவார்கள் என்பதுதான்.

இந்தத் தீர்ப்பு வெளியான பிறகும் பெண்களின் பிரதிநிதியாகவும் ஒட்டுமொத்த சாட்சியங்களின் முகமாகவும் தன்னை முன்னிறுத்துவதை ஹெர்ட் மாற்றிக்கொள்ளவில்லை. இந்தத்தீர்ப்பினால் 'குடும்ப வன்முறை' வழக்குகளில் பெண்களின் தரப்புக்குப் பின்னடைவு ஏற்படும் என்பதை உணர்ந்து வருத்தம் தெரிவித்திருக்கிறார். அவரது அகந்தையாலும் குணக்கேட்டினாலும் விளைந்த ஊறு. என்ன செய்வது, எப்போதேனும் ஆண்களையும் இவ்வுலகம் நம்பும் என்பதை ஆமப்ர் ஹெர்ட் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிறுவர் கைவண்ணம்



க. கனிமொழி
தரம் 09
யா/மகாஜனக் கல்லூரி



சு.டேனுஷா
தரம் 8
வவு/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்



வ.மதுஜா
தரம் 8F
யாழ். இந்து மகளிர் கல்லூரி



சு.அஸ்மிகா
தரம் -3
வவு/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்



"பெண்களை ஏறெடுத்துப் பார்ப்பது ஒரு ஆணுக்கு இயல்பானது. அதை மீறி கனகுவிடம் தப்பானவை எதையும் தான் உணரவில்லை என நினைத்தாள்."

**38**

○ கருணை ரவி

பூங்கொடி வீட்டுக்குப்போகும் வரைக்கும் வெற்றிலைக்கடைக்காரன் கேட்டதே ஞாபகத்தில் வந்துகொண்டிருந்தது. அவன் ஏன் அப்படிக் கேட்டான்? அவனில் விருப்பப்பட்டேனா? விருப்பப்படக்கூடியதாக நடந்தேனா? எனக்கு இரண்டு பிள்ளைகள். ஒன்று போராளி... இதை நினைத்தானா? அவள் இதுவரைக்கும் சந்தித்த மனிதர்களில் அவளுடன் பழகுபவர்களில் மூன்று பேர் அவளை அப்படிக் கேட்டு விட்டார்கள். வெற்றிலைக்கடைக்காரன், மரியதாஸ், பிலிப்பு. இந்த மூவரில் அவள் பிலிப்பை ஒரு சகோதரனாக நினைத்தாள். அவள் இடம்பெயர்ந்து பன்னங்கண்டிப் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது பிலிப்புவின் மனைவி குளிக்கப்போன நேரம் பிலிப்பு கேட்டான்.

அவளின் ஏழ்மையைச் சாதகமாகப் பயன்படுத்தி அவளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்து, வயல் வெளிக்கு இரவு வரச் சொன்னான். மரியதாஸ் கரடிப்போக்குச் சந்தியில் கண்டதும் அவளை மூன்றாவது மனைவியாக வைத்திருக்கிறேன் என்று கேட்டான். இப்போது வெற்றிலைக்கடைக்காரன். இதைக் கேட்பதற்காகத்தான் கஞ்சாக் கனகுவை ஒரு அயோக்கியனாக்கினானா?

பெண்கள்ளை ஏறெடுத்துப் பார்ப்பது ஒரு ஆணுக்கு இயல்பானது. அதை மீறி கனகுவிடம் தப்பானவை எதையும் தான் உணரவில்லை என நினைத்தாள். தான் முதல் முதல் கனகுவின் கடைக்குப் போனபோது நிருபன் கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்த றொட்டியை வாங்கித்தரும்படி சிணுங்கினான். காசு இல்லாததால் வாங்கிக் கொடுக்கவில்லை. அதைப் பார்த்து கனகு கொத்துறொட்டி வாங்கிக் கொண்டு வந்ததை நினைத்தாள். ஆனால் கஞ்சாக்கனகுவால் தான் வெற்றிலைக்கடைகாரனின் மனைவி செத்தாள் என்பது அவளுக்குத் தெரியாது.

கஞ்சாக்கனகுவுக்கும் வெற்றிலைக்கடைக்காரனுக்குமான நட்பு பதினைந்து ஆண்டுகள். வெற்றிலைக்காரன் கடைபோடுவதற்கு முதலே கஞ்சாக்கனகு கடை வைத்திருந்தான். கனகு கடைதிறந்து ஒரு மணித்தியாலத்துக்குப் பிறகுதான் வெற்றிலைக்கடைக்காரன் கடை திறப்பான்.

கனகு தனது கடைக்குப் பூக்கள் கொண்டு வரும்போது வெற்றிலைக்கடைகாரனுக்கும் ஒரு பையில் பூக்கள் கொண்டுவருவான். கனகு சாமான் வாங்குவதற்கு கடைக்குப் போனால் வெற்றிலைக்கடைகாரன் தான் கடையை நடத்துவான். வெற்றிலைக் கடைக்காரனும் கடைக்கு வராத நாட்களில் கனகுவின் கடையில் வெற்றிலையைக் கொடுத்து விடுவான். கனகு அந்த வெற்றிலையை விற்பான்.

சிலவேளைகளில் வெற்றிலைக்கடைக்காரன் மனைவி பரிமளத்தைக் கடையில் விட்டுச்செல்வான். பரிமளம் வாய்க்குள் வெற்றிலையைக் குறைய விட மாட்டாள். எப்பவும் சொண்டு சிவந்தபடியே இருக்கும். மூக்கின் இரண்டு சோணைகளுக்கும் மூக்கு மின்னி போட்டிருப்பாள். பெரிய மஞ்சள் கயிற்றுத்தாலியோடு சங்கிலி ஒன்றும் கழுத்தில் இருக்கும். அவள் கடையில் நின்றால் கஞ்சாக்கனகு அடிக்கடி வெற்றிலைக்கடைக்குப் போவார். அவளுக்கு காலையும் மாலையும் கனகுதான் ரீ கொண்டுபோய்க் கொடுப்பார்.

கனகு வீட்டுப் பாதையில்தான் வெற்றிலைக் கடைக்காரனின் வீடு. கனகு வீட்டில் போய் சாப்பிட்டு வரும்போது வெற்றிலைக் கடைக்காரனுக்கும் பரிமளம் சாப்பாடு கொடுத்து விடுவாள். சில வேளைகளில் கனகு சாப்பாட்டுக்குப் போகும்போது உத்தமன் பள்ளிக் கூடத்தால் நடந்து வந்தால், அவனை ஏற்றி வீட்டில் விடுவார்.

ஒருநாள் உத்தமன் பள்ளிக்கூடத்தால் வந்து வீட்டுக்குள் நுழைந்ததும் திரும்பி வெளியில் வந்தான். தோளில் இருந்த புத்தகப் பையை கழற்றி எறிந்தான். மீண்டும் அவன் வீட்டுக்குள் போகவில்லை. தெருவில் போய் நின்றான். கனகு வீட்டுக்குள்ளிருந்து வெளியில் வர உத்தமன் ஆலமரத்தோடு மறைந்தான். கனகு போனதும் அவன் வீட்டுக்குப் போகவில்லை. தாயைப் பார்க்க அவனுக்கு வெட்கமாக இருந்தது.

வெற்றிலைக்கடைக்காரன் சாப்பாட்டுக்கு காத்துக் கொண்டு நிற்க கனகு வந்தார். கனகு அவனுக்கு சாப்பாடு கொண்டுவரவில்லை. தான் வீட்டுக்குப் போக வில்லை என்றும் கடையில் சாப்பிட்டதாகவும் சொன்னார்.

"கடையைப் பார்" என்று வெற்றிலைக்கடைக் காரன்கனகுவுக்குச்சொல்லிவிட்டுவீட்டுக்குப்போனான். உத்தமன் தகப்பனைக்கண்டதும் கண் கலங்கினான். தகப்பனின் சைக்கிள் கரியலில் பிடித்துக்கொண்டு பின்னால் ஓடினான். வெற்றிலைக்கடைக்காரன் வீட்டுக்குள் நுழைய, வீட்டு வளையில் பரிமளம் தூங்கிய படி இருந்ததை உத்தமன் [illegible]. இந்தக்கதை ஒன்றும் [illegible] தெரியாது.

உத்தமனுக்கு மட்டும்தான் தாய் ஏன் தூங்கினாள் என்பது தெரியும். நிருபன் புதுச்சேட்டு, காற்சட்டையுடன் பள்ளிக்கூடம் போனான். இரண்டு வருசத்துக்குப்பிறகு இன்றுதான் புது உடுப்புப் போட்டிருந்தான். அவன் புதுச்சட்டையோடு புத்தகப்பை, கொம்பாஸ் எல்லாம் புதுசோடே போனான். அவன் போகும் போது அவள் வாசலில் நின்று அவன் மறையும் வரை பார்த்துக்கொண்டு நின்றாள். பழைய சேட்டு இனிப்போட முடியாது. அவன் வளர்ந்து விட்டான். சேட்டும் நைந்து போய் விட்டது. காற்சட்டை போடலாம். காற்சட்டையில் பின்னுக்கு சிறு வெடிப்பு இருந்தது. அதை தைப்பதற்கு ஊசி எடுத்தாள். இன்று மத்தியானம் நிருபன் வந்ததும். உத்தமனிடம் போகவேணும் என நினைத்தாள். உத்தமன் இன்று அவளை வரச் சொல்லியிருந்தான். நித்தி இருக்கும் இடத்தை கண்டுபிடித்திருப்பான் என்ற நம்பிக்கை அவளுக்கு.

இன்று வழமையை விட அவள் சந்தோசமாக இருந்தாள். வழமையாக அவள் ஒரு கறியுடன் சமைப்பாள். நல்ல மீன் வாங்க மாட்டாள். அதுக்கு கனக்க காசு வேணும். குளத்து மீனையே வாங்குவாள். இரவில் இருந்திட்டு புட்டு, அல்லது இடியப்பம் அவிப்பாள். மற்றும்படி சோற்றையே இரவில் சாப்பிடுவாள். நிருபனுக்கு சோறுதான் பிடிக்கும். இரவுகளில் புட்டுச் சாப்பிட்டால் இரவில் அடிக்கடி தண்ணி கேட்பான். தண்ணியைக் குடித்துவிட்டு இரவில் படுக்கையில் மூத்திரம் பெய்வான். அதற்காக அவள் புட்டு இரவில் அவிக்கமாட்டாள். நிவாரண மா முடியும்வரை இரவில் றொட்டி சுடுவாள்.

கொஞ்ச நாட்களாக அவள் குளத்து மீன்கள் வாங்குவதில்லை. கடல் மீன்களே வாங்குவாள். தலையில் சொதி வைப்பாள். மீனோடு துணைக்கறியும் வைப்பாள். கிழமையில் மூன்று நாள்களுக்கு கீரை சமைப்பாள். சனிக்கிழமைகளில் இறைச்சி சமைப்பாள். இப்படி சமையல் மாறியது. கஞ்சாக்கனகுவுக்கு மதியச் சாப்பாடு கொடுப்பதால். சாப்பாடு கொடுக்கப் பிந்தினால் கனகு வீட்டுக்கு வந்து விடுவார். அதற்காக வேளைக்கு சமைத்துவிடுவாள். பன்னிரண்டு மணிக்கு கனகுவின் கடை மேசையில் சாப்பாட்டை வைப்பாள். இன்றும் வேளைக்கு சமைப்பதற்காக காற்சட்டையை தைத்து தோய்த்து விரித்துவிட்டு நிற்க.

"அம்மா..."


என்றான் நிருபன். பார்த்தாள். வெள்ளைச் சேட்டில் சேறு இருந்தது.

(வருவாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்
செட்டிகுளம், வவுனியா







# கோடை காலம் கோழிகளுக்கு சாபம்

கோடைகாலத்தில் ஏற்படும் அதிகரித்த வெப்பம் காரணமாக கோழிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. கோழிகளுக்கு உகந்த உச்ச பட்ச சூழல் வெப்பநிலையாக 30-32 செல்சியஸ் அளவிலேயே காணப்பட வேண்டிய போதும் இலங்கை போன்ற நாடுகளில் வருடம் முழுவதும் அதனைவிட அதிகரித்த வெப்பநிலை காணப்படுவது அண்மைக்காலத்தில் அவதானிக்கப்பட்டுள்ளது.

உலக வெப்பமுறுதலின் தாக்கமாக இதனைக் கருத முடியும். எனவே கோடை காலம் மட்டுமின்றி வருடம் முழுவதும் கோழிகளை வெப்ப அயர்ச்சியில் இருந்து பாதுகாக்க வேண்டிய தேவை கோழிப் பண்ணையாளர்களுக்கு ஏற்படுகிறது.

சராசரியை விட சூழல் வெப்பநிலை அதிகரிக்கும் போது கோழிகள் அசௌகரியத்தை சந்திக்கின்றதோடு அதிகளவில் இறக்கவும் செய்கின்றன. அதிகரித்த வெப்பநிலை காரணமாக கோழிகளில் உடல்எடை குறைதல், இறைச்சியின் தரம் குறைதல், முட்டையின் தரம் குறைதல், முட்டை உற்பத்தி குறைதல், இனப்பெருக்க ஆற்றல் குறைதல் போன்ற பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன.



கோழிகளுக்கு எமக்கு இருப்பது போல் வியர்வைச் சுரப்பி கிடையாது. எனவே தமது அலகைத் [ வாயை ] திறந்துதான் அதிகளவில் உடல் வெப்பத்தை அவை வெளியேற்றுகின்றன.

பொதுவாக ஆரோக்கியமான கோழிப்பண்ணைகளுக்கு அண்மையில் நாம் போகும் போது அவை தமது அலகை திறந்து சுவாசிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும்.

இது அந்தப் பண்ணையின் ஆரோக்கியத்தின் அறிகுறி. நோய்ப்பட்ட கோழிகளில் மேற்படி சத்தம் கேட்காது அல்லது சளி கலந்து இழுவையாக கேட்கும். அத்துடன் நோய் கண்ட கோழிகள் தீவனம் உட்கொள்ளது சோர்ந்து பக்கமாக ஒதுங்கி இருக்கும். இலங்கையின் வடக்கு ,கிழக்கு போன்ற உலர்வலயப் பகுதிகளைப் பொறுத்தவரை, கோடை காலமாக மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜுலை, ஓகஸ்ட் போன்ற மாதங்களை குறிப்பிட முடியும். தென் மாகாணம், வட மேல் மாகாணங்களில் ஜுன், ஜுலை, ஓகஸ்ட் மாதங்களில் தென் மேல் பருவக்காற்று மழை கிடைப்பதால் அந்த மாதங்கள் ஓரளவு பசுமையானவை.

வடக்கு,கிழக்கு பகுதிகளில் ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்கள் மழை காலமாகவும் ஜனவரி, பெப்ரவரி மாதங்கள் குளிர் காலமாகவும் காணப்படும். இந்தக்காலத்தில் வெப்ப அயர்ச்சி குறைவாகவே கோழிகளுக்கு காணப்படும்.

எனினும் குளிர்காலப் பிரச்சினைகள் அந்தக் காலத்தில் காணப்படும். கோழிப் பண்ணை வளர்ப்பில் மேற்படி மாதங்களின் சூழல் வெப்ப நிலையைக் கருத்திற்கொண்டு சரியான மேலாண்மை முறையை அந்தந்தப் பகுதிகளில் கடைப்பிடிக்க வேண்டும்.நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல இலங்கையில் அண்மைய வருடங்களில் பெரும்பாலும் வருடத்தின் சகல மாதங்களிலும் அதிகரித்த வெப்பநிலை காணப்படுவதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

### கோழிகளில் வெப்ப அயர்ச்சியின் அறிகுறிகள்

1. அதிகமாகவும் வேகமாகவும் மூச்சு விடும்
2. அதிகமாக தண்ணீர் குடிக்கும்.
3. இறக்கைகளை தளர்வாக நிலத்தில் படர்த்தியபடி இருக்கும்.
4. தலை மற்றும் கொண்டையைத் தண்ணீரில் அமிழ்த்தியபடி இருக்கும்.
5. குறைவாகவே தீவனம் எடுக்கும்.
6. எடை குறையும்,வளர்ச்சி வீதமும் குறையும்.
7. முட்டை உற்பத்தி குறையும்.
8. சிறிய, தரக்குறைவான, ஓடுகள் நலிவடைந்த முட்டைகளை இடும்.



### கோழிகளில் வெப்ப அயர்ச்சியைக் குறைக்கும் மேலாண்மை முறைகள்


#### தீவன மேலாண்மை

* குளிர் காலத்தை விட கோழிகள் 5-10 வீதம் கோடை காலத்தில் தீவனத்தை குறைவாகவே உட்கொள்ளும். இதனால் தேவையான எரிசக்தி , புரதம், அமினோ அமிலங்கள், கனியுப்புகள், விற்றமின்கள் போன்ற ஊட்டச்சத்துகள் குறைவாகவே கிடைக்கும். இதனால் கோழிகளின் எடை குறைவதோடு முட்டை உற்பத்தியும் பாதிக்கப்படும்.

எனவே ஊட்டச் சத்துக்களை அதிகம் உணவில் சேர்க்க வேண்டும் . [ 5-10%]

*(மிகுதி அடுத்தவாரம்)*

# 86 சொற்சிலம்பம் போட்டி



### இடமிருந்து வலம்

1. ஒன்றாய் வாழ்ந்த பண்பு 5. ஒரு கணிதக் குறி 7. அருகில் 8. ஒரு வகை ஆட்டம் 9. பழுத்தல் 11. புடவை/ சேலை 13. முகவரி 15. நோவு 17. இது வரக்கூதலும் வரும் 18. நாயன்மார் பாடியது 21. நண்பகல் வேளை 22. நிணம்/ இறைச்சி / சதை 23. சுவர் 24. பொக்கிஷக்காரன்

### மேலிருந்து கீழ்

1. எல்லோருக்கும் எல்லாமும் ஒரே மாதிரியாகக் கிடைக்கும் நிலை 2. உயிர்ப்பின் ஆரம்பம் 3. கொடுக்கல் மறுபக்கத்தில் 4. இராமாயணத்தில் கூனி போன்று மகாபாரதத்தில் இவர் 5. மறைவில் தீட்டுவது 6. அகம்பாவம் 8. குலாவுதல் 10. அந்தரி 12. பீதி/அச்சம்/ பயம் 14. ஒரு கிழமை 16. பழைய அல்ல 18. விடை 19. இதுவும் இப்போது விலையேற்றமே 20. திருமணம் செய்யாத இளம் பெண் 21. சந்திரன் 22. ஒரு நிறம்

அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

........................................................

கையொப்பம்:...........................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**சொற்சிலம்பம் போட்டி இல.86**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**10.06.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### சொற்சிலம்பம் போட்டி 85 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சீவகசிந்தாமணி 7. மன்னன் 8. கண் 9. கானகம் 12. தலம் 13. ஆடை 14. பரப்புரை 17. நிரம்பல் 19.ஆழம் 20. வாளி 21. வில் 22.பதினொன்று

**மேலிருந்து கீழ்**

1.சீமந்தம் 2.வன் 3. கனகாம்பரம் 4. சின்ன 5. தாகம் 6. மண் 10. கர்ப்பவதி 11. விடை 13. ஆரை 15. ரம் 16. புல் 17. நிழல் 18. கயிறு. 19. ஆவி 20. வான்

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 85 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
அக்சிகா நகுலேஸ்வரன்
435/55 கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
க.கலைவாணி
வெள்ளவத்தை
கொழும்பு.

**3 ஆம் பரிசு**
ச.[illegible]
இல.76 [illegible] வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
[illegible]
83/16 [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
[illegible]புவனா
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனம் ரணில்!



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சூழ இருப்பவர்கள் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிருப்தியடைந்திருக்கிறாராம்.

பிரதமர் ரணிலின் விசுவாசியும், ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கியஸ்தருமான சாகல ரத்னாயக்கவை, ஜனாதிபதி அண்மையில் நேரில் அழைத்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

அதேபோல சமகால அரசியல் நிலைவரம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன. அவ்வேளையில்,

" மஹிந்த ராஜபக்ச அரசியலில் உச்சம் தொட்டவர். ஆனால் அவரைச் சூழ இருந்தவர்கள் காலை வாரினர். களங்கத்தை ஏற்படுத்த வழிவகுத்தனர். பிரதமர் ரணிலுக்கும் இந்நிலைமை ஏற்படக்கூடாது. எனவே, கவனமாக இருக்கச் சொல்லுங்கள்." என சாகல ஊடாக ஜனாதிபதி தூதனுப்பியுள்ளார். தனது அண்ணனான மஹிந்த ராஜபக்சவை, பிரதமர் பதவியில் இருந்து விலக்க வைப்பதற்கு தான் ஏதோவொரு வழியில் அழுத்தம் பிரயோகிக்க நேரிட்ட விவகாரத்தால் ஜனாதிபதி தற்போதும் கவலையில் இருக்கின்றாராம் .

" அண்ணனால்தான் எனக்குப் பதவிகள் கிடைத்தன. ஆனால் அவரையே வீட்டுக்கு அனுப்ப வேண்டியேற்பட்டது. நாட்டுக்காக நான் இதனைச் செய்தேன். எனது வாழ்வில் எடுக்கப்பட்ட கடினமான தீர்மானம் இதுதான். " என அண்மையில் நடைபெற்ற ஆளுங்கட்சி கூட்டத்தின்போதும் தனது உள்ளக் குமுறலை ஜனாதிபதி இவ்வாறு வெளியிட்டாராம்.

## அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## சுரேனுக்கு அபிஷேகம்!

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில்,ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் விசேட கூட்டமொன்று, ஜூன் 02 ஆம் திகதி, நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர உட்பட சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு வழங்கப்பட்ட தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்து, அரசுக்கு ஆதரவளித்து இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட கலாநிதி சுரேன் ராகவன்,

"இது சர்வகட்சிக் கூட்டமா? அல்லது ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கான கூட்டமா?" என நீதி அமைச்சரிடம் வினவியுள்ளார். தன்னை இலக்கு வைத்தே சுரேன் ராகவன், இப்படி கேள்வி எழுப்புகிறார் என்பதை அறிந்த தயாசிறி ஜயசேகர, கடுப்பாகி கூட்டத்திலிருந்து வெளியேற முற்பட்டார்.

மஹிந்தானந்த அளுத்கமகே உட்பட மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரைத் தடுத்து நிறுத்தினர்.

கூட்டம் முடிவடைந்த பின்னர், சுரேன் ராகவனுக்கு, தயாசிறி ஜயசேகர வார்த்தைகளாலேயே அபிஷேகம் செய்தார் என கூட்டத்தில் பங்கேற்றிருந்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## அதிகரிக்கும் விலை



நாடாளுமன்றத்தில் வழங்கப்படும் உணவு மற்றும் சிற்றுண்டிகளின் விலைகளில் அதிரடி மாற்றம் இடம்பெறவுள்ளது. இது தொடர்பான விலைமனு பட்டியல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள் மற்றும் விருந்தினர்களது உணவு மற்றும் சிற்றுண்டிகளுக்காக, நாடாளுமன்றம் வருடாந்தம் 12 கோடி ரூபாவை செலவிடுகின்றது.

நாடாளுமன்றத்தில் சுமார் ஆயிரத்து 500 பேர்வரை உணவுகளை எடுத்தாலும், 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றியே கதைக்கப்படுகின்றது. மொத்த செலவீனம் 225 ஆல் பிரிக்கப்படுகின்றது. அத்துடன், தரமான உணவுகள் சலுகை விலையில் வழங்கப்படுவதால் அது தொடர்பில் மக்களிடையே கடும் அதிருப்தி உள்ளது.

இந்நிலையில் தமக்கு உணவு வேண்டாம் அல்லது வெளியில் உள்ள விலைக்கே அதனை வழங்குமாறு சபாநாயகரிடம், உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

"நாடாளுமன்றம் சிறிய தீவில் அமைந்திருப்பதால், வெளியில் சென்று உண்பது கடிதம். அதனால்தான் உள்ளேயே உணவு வழங்கப்படுகின்றது. இது விடயத்தில் பாதுகாப்பு பிரச்சினையும் உள்ளது. உணவுப் பார்சல் ஊடாகவே நாடாளுமன்றத்துக்கு குண்டுகூட கொண்டுவரப்பட்டது. எனவே ,உணவு வழங்குவதைத் தடைசெய்யாமல், விலையை அதிகரிக்கலாம்." என சபாநாயகர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமையவே விலை உயர்வு இடம்பெறவுள்ளதாம்.

## பதவித் தூண்டில்!



அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச்சட்ட வரைவை நிறைவேற்றிய பிறகு, இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பது தொடர்பில் அரசு அவதானம் செலுத்தியுள்ளது. பதவி என்ற தூண்டிலைப் போட்டு தன் பக்க ஆதரவை அதிகரிக்க ரணில் யோசித்து வருகின்றார். 30 மற்றும் 40 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன. இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் நால்வருக்கும், பதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், அரசில் இணைந்து இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரவிந்தகுமார், வியாழேந்திரன், சுரேன் ராகவன், காதர் மஸ்தான் உள்ளிட்டவர்களுக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

21 ஆவது திருத்தச்சட்டமூலத்தை நிறைவேற்றிய பிறகு இராஜாங்க [illegible] நியமிப்பதென தற்போது தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், அதற்கு முன் [illegible] நியமனம் இடம்பெறலாம் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

○ கோகுலராகவன்



# இருந்து கதைப்பம்

கிராமப்புறங்களில் ஏதேனும் அலுவலாக ஒருவரை சந்திக்கப் போகும்போது, அலுவல் முடிய கொஞ்சம் நேரம் எடுத்து விட்டால் "வாருங்கோ வாருங்கோ இருந்து கதைப்பம் " என்று அழைப்பார்கள்.

பிறகென்ன தேநீர்,வெற்றிலை போட்டு, கதை முடிய, பொழுது படலாம். இந்தத்தொடரில் வரும் கதைகளும், 'இருந்து கதைத்த' கதைகளாகவும், 'இருந்து கதைக்கக்கூடிய' கதைகளாகவும் சுவாரசியமாக அமையுமென நம்புகிறேன்.

1

ஏ.எல் படித்து முடிய கொஞ்ச நாள்கள் எதுவும் அற்ற நிலை உருவாகியது. பொழுது போக வேண்டுமே.

மாலையில் வாசிகசாலைக்கு முன்பாக போட்டிருந்த தென்னங்குற்றியில் அமர்ந்திருந்து அரட்டை அடிப்போம். எப்படியும் நாலைந்து பேர் கூடிவிடுவோம்.

கதை சுவாரசியமாகிவிட்டால் நேரம் போறதே தெரியாது. மையிருட்டில்தான் வீடு போய்ச் சேர்வோம். அம்மாவிடம் சுபமங்கலம் வாங்கினாலும் அடுத்த நாளும் அதே கதைதான்.தென்னங்கொட்டில் குந்தி இருந்து கதைக்கிற சுகம் , ஏ.சி அறையில் இருந்து கதைத்தாலும் கிடையாது.

இப்போது பளைக்கு போகையில் வாசிகசாலையைத் திரும்பி பார்க்கும்போது இனம்புரியாத கவலை மனதில் எழும்.

"என்னத்தை கதைத்தோம்?"

ஊருக்குள் நடக்கிற கதைகள் நாலுபக்கத்தாலும் வரும். இப்படி கதை போய்க்கொண்டிருக்க, இடையில் எங்களோடு கதைக்க ஒருவரை பிடித்து விட்டோம்.


ராசண்ணை.

தென்னந்தோட்டத்தில் வேலைக்கு போறவர்.மூன்றுபிள்ளைகள். மூத்தமகள் ஏ.எல் படித்துகொண்டிருந்தாள். மற்றப் பிள்ளைகளும் படித்து கொண்டிருந்தார்கள். நல்ல உழைப்பாளி.ஆனால் மூன்று பிள்ளைகளையும் வளர்க்கச் சிரமப்பட்டார்.

ராசண்ணைக்கு எங்களுடன் கதைப்பதில் தனி விருப்பம். அவரும் நன்றாக ஊர்க்கதை கதைப்பார். சகல ஊர்ப்புதினமும் நுனி நாக்கில் வைத்திருப்பவர். இதனால் நாமும் அவரை விடுவதில்லை.

"அண்ணை கிளார்க்கர் சின்னையாண்ணையின் மூத்தவள் ஆரையோ பார்க்கிறாளாம். ஆரண்ணை?"

"அப்படியே எனக்கு தெரியாது" இழுப்பார்.



"அண்ணை உங்களுக்கு தெரியாமல் கிடக்கே சொல்லுங்கோ"

"ஒருத்தருக்கும் செல்லக்கூடாது சரியோ"

சிரிப்பார்

"இன்னார்தான்."

"அண்ணை நீங்க ஒரு றிப்போட்டர்தான்."

இப்படி பல கதைகளை ஆளை ஏத்திவிட்டால்போதும் அள்ளி வீசுவார்., நாங்கள் கதைக்கும்'இளந்தாரிப் பருவ' கதைகளையும் சுவாரசியமாக கேட்பார்.

இப்படி இருக்கையில் கொஞ்சநாளாக ராசண்ணை எங்களுடன் கதைக்க வருவதில்லை . ராசண்ணைக்கு எங்களுடன் ஏதோ கோபம்.ஒருநாள் மறித்துப் பிடித்து விட்டோம்.

"ராசண்ணை வாங்கோ கதைப்பம்."

"போங்கோடா உங்களோட ஆரும் சேருவினையோ?"

"ஏனண்ணை?"

"காவாலிகள்."

திட்டிவிட்டுப் போய்விட்டார்.

ஒரு ஆறுமாதம் கழித்து எங்களை நோக்கி வந்தார்.

"இந்தாங்கோடா கற்கண்டு "

"என்ன விசேஷம்?"

"எனக்கு ஆம்பிளைப்பிள்ளை ஒண்டு பிறந்திருக்கு."

வாழ்த்துச் சொல்ல முன் வேகமாக சைக்கிளில் ஏறிப் போய்விட்டார். அவர் எங்களோடு சேராமல் விட்டதற்கு காரணம் இப்போது புரிந்தது. நாங்கள் சொன்ன 'இளந்தாரிப் பருவக் கதைகள்' கடைசியில் இந்த வயதில் ராசண்ணையைக் கற்கண்டு தர வைத்துவிட்டதே.

(கதைப்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கலைஇலக்கியப் பேரவையின் புத்தக அரங்க விழா







○ மு.தமிழ்ச்செல்வன்

கடந்தவாரம் தேசிய கலை இலக்கிய பேரவை கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் நூறு மலர்கள் மலரட்டும் புத்தக அரங்க விழாவினையும், கண்காட்சி மற்றும் விற்பனையையும் நடத்தியிருந்தது. நீண்ட காலத்துக்குப் பின்னர் கிளிநொச்சியில் இடம்பெற்ற இந்த நிகழ்வு இலக்கியவாதிகள், படைப்பாளிகள் மற்றும் வாசகர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்தநிகழ்வில் களத்திலும், புலத்திலும் இருந்து வெளிவந்த பல படைப்பாளிகளின் நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டதோடு நூல்கள் விசேட விலைக் கழிவில் விற்பனையாகின. அத்தோடு அரங்க நிகழ்வுகள், கருத்துப் பரிமாற்றங்களும் நிகழ்ந்தன.

முதலாவது நாளில் பேராசிரியர் சிவசேகரத்தின் 'சிவசேகரம் கவிதைகள்' நூல் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது. 'தாயகம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் தேசிய கலை இலக்கிய பேரவையின் தலைவருமான க.தணிகாசலம் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் நூல் அறிமுகத்தை கவிஞர் கருணாகரனும், கருத்துரையினை சட்டத்தரணி சோ. தேவராஜாவும் வழங்கினார்கள். நிகழ்ச்சியை ஆசிரியர் த. ஸ்ரீபிரகாஸ் தொகுத்து வழங்கினார்.

மாலை 6.30 மணிக்கு நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பில் விரிவுரையாளர் க.ரதிதரனின் நெறியாள்கையில் உருவான அன்ரன் செக்கோவின் 'தான் விரும்பாத தியாகி' நாடகமும், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் பு.கணேசராஜாவின் நெறியாள்கையில் உருவான 'தலை எழுத்து' நாடகமும் அரங்கேற்றப்பட்டன.

இரண்டாவது நாள் நிகழ்வில் சனிக்கிழமை நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரனின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ஐந்து நூல்களின் அறிமுகங்கள் நடந்தேறின.

கவிஞர் கருணாகரனின் கடவுள் என்பது துரோகியாயிருத்தல் என்ற நூலினை எழுத்தாளர் ச.சிந்தாந்தனும், அவுஸ்திரேலியா தெய்வீகனின் உன் கடவுளிடம் போ நூலினை யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணனும், தமிழ்க்கவியின் நரையன் நூலை ஆசிரியர் ப. தயாளனும், இராஜேஸ்கண்ணனின் 'கிராமத்து மனிதர்கள்' நூலை எழுத்தாளர் தமிழ்க்கவியும் சிந்தாந்தனின் அம்ருதாவின் புதிர் வட்டங்கள் நூலினை கலாநிதி சு.குணேஸ்வரனும் அறிமுகம் செய்து உரையாற்றினர். நிகழ்ச்சியை ஆய்வாளர் சத்தியதேவன் தொகுத்து வழங்கினார்.

மூன்றாவது நாள் காலை 10 மணிக்கு ஆசிரியர் விஜயசேகரம் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வை கலாசார உத்தியோகத்தர் ச. தனுஜன் தொகுத்து வழங்கினார். நூல் அறிமுக நிகழ்வில் அலெக்ஸ் பரந்தாமனின் ஒரு பிடி அரிசி நூலை கவிஞர் திருநகரூர் ஜெகாவும், சாந்தனின் சித்தம் சரிதம் நூலினை எழுத்தாளர் மு. அநாதரட்சகனும், அருட்தந்தை அன்புராசாவின் கொரோனா ஊரடங்கும் நானும் என்னூர் நாய்களும் என்ற நூலினை ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வனும் , கவிஞர் தீபச்செல்வனின் நடுகல் நூலினை எழுத்தாளர் கனகபாரதி செந்தூரனும் அறிமுகம் செய்து உரையாற்றினர். தொடர்ந்து கருத்தாடல்களுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

தேசிய கலை இலக்கிய பேரவையினர் அர்ப்பணிப்புடன் தங்களது பணிகளை மேற்கொண்டிருந்தார்கள். கிளிநொச்சியில் நிகழ்வுகளை நடத்துவதற்கு பலரும் தங்களது ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள்.

இந்த நிகழ்வுகளுக்கு அதிகளவு பார்வையாளர்கள் திரண்டிருக்கவில்லை. எனினும் ஒரு காத்திரமான முயற்சிக்கான முதற்புள்ளி பலமாக இடப்பட்டிருக்கிறது. அடுத்து வரும் வருடங்களில் அரங்கு நிறைந்த பார்வையாளர்களோடு இந்த நிகழ்வு தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதே பலரது அவா. ■



# ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரினால் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் அநீதி மற்றும் நெருக்கடி தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டிருந்தாலும், அது குறித்து பொலிஸ் உயர் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுப்பதில்லை. ஆகவே பொதுமக்களின் முறைப்பாடு மற்றும் உயர் அதிகாரிகளின் அலட்சியப்போக்குத் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் அதிகாரம் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும் என்றும் ஒன்பது கட்சிகளின் யோசனைகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்றத்தின் மாண்பு, ஜனாதிபதியின் பதவிக்காலம் போன்றவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாத முறையிலும் 21 ஆவது திருத்தச் சட்டத்துக்கான நகல் வரைவில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென குறித்த ஒன்பது கட்சிகளும் தமது யோசனைகளில் பரிந்துரைத்துள்ளன.

முக்கியமாக சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிப்பதற்கான அரசியலமைப்புப் பேரவை உறுப்பினர்களுக்கான நியமனத்தின்போது, பெயர் குறிப்பிட்டு உறுப்பினர்களைப் பரிந்துரைக்கும் யோசனை ஒன்பது கட்சிகளின் கோரிக்கைகளில் முக்கியமான ஒன்றாகவுள்ளது. இந்த ஒன்பது கட்சிகளும் சமர்ப்பித்துள்ள யோசனைகள் என்பதற்குள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த உறுப்பினர்கள் குறிப்பாக ராஜபக்ச சகோதரர்களின் பின்னணி இருந்திருக்க வாய்ப்பில்லாமலில்லை.

இந்தப் பின்னணி வெளிப்படையாகவே தெரிகின்றது. ஆகவே நெருக்கடியானதொரு சூழலில் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தனது பதவியைத் தக்கவைக்க முடியுமா என்று எவரும் கேள்வி எழுப்பினால், அந்த கேள்வி நியாயமானதாகவே இருக்கும். அது மாத்திரமல்ல, பொருளாதாரநெருக்கடி, விலைவாசிஉயர்வுப்பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு என்று யாரும் கேள்வி எழுப்பினாலும், அந்தக் கேள்வியின் தொனி அனைத்து மக்களின் ஏக்கங்களையும் பிரதிபலிப்பதாகவே அமையும். 21ஆவது திருத்தம் எழுபது வருட இனப் பிரச்சினைக்குத் தீர்வல்ல. ஆனால், வல்லரசு நாடுகளின் தலையீடுகளோடு சிலவேளை ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு ஏதேனும் தீர்வு வந்துவிடுமோ? என்றதொரு தேவையற்ற அச்சம் சிங்கள அரசியல் தலைவர்கள் பலருக்கு உண்டு. மகாநாயக்கர்களும் அதற்கு விதிவிலக்கல்ல. இலங்கை ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பைத் தொடர்ந்து பேண வேண்டும் என்பதே சிங்கள அரசியல் தலைவர்கள் பலரின் அடிப்படைவாதச் சிந்தனை.

ஆகவே ரணில் பிரதமர் பதவியை ஏற்ற பின்னரான சூழலில், தோற்கப்போவது சிங்கள அரசியல் தலைவர்களா? அல்லது பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களா? என்பதை அவதானிக்க இன்னும் குறைந்த நாள்கள் மாத்திரமே உண்டு. எழுபது ஆண்டுகால இனப்பிரச்சினைக்குரிய நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்காமல், இலங்கைத்தீவில் ஸ்திரமான அரசியல் இருப்பும், உறுதியான பொருளாதாரக் கட்டமைப்பும் நிலைபெற முடியாதென்பது குறித்து இந்த அரசியல் பத்தியில் ஏற்கனவே ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. சிங்கள அரசியல் தலைவர்கள் மகாவம்ச மனநிலையில் இருந்து விடுபடும்வரை இலங்கைத்தீவுக்கு மீட்சி இல்லை என்பதும் ஏலவே இப்பத்தியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# கோத்தா கோகமவின்...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனென்றால் அந்தக்கிராமம் தோற்கவோ, சோரவோகூடாது என்ற ஒரு கூட்டுணர்வு தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் அநேகர் மத்தியிலும் காணப்படுகிறது.

காலிமுகத்திடலில் ஊடகக் கவர்ச்சிமிக்க ஓரிடத்தில், வெளிநாட்டு ராஜதந்திரிகளின் வதிவிடங்கள், மற்றும் உல்லாசப்பயண விடுதிகளின் மத்தியில், காணப்படும் ஒரு போராட்டக் கிராமம் 50 ஆவது நாளைக் கடந்த பொழுது அது ஊடகங்களில் சமூக வலைத்தளங்களில் ஒரு பேசுபொருளாக காணப்பட்டது. ஆனால் தமிழ்ப் பகுதிகளில் வீதியோரங்களில் அமர்ந்திருக்கும் முதிய தமிழ் அன்னையர்களின் போராட்டம் அன்றைய தினம் 1924 ஆவது நாளைக் கடந்தது. கோத்தா கோகமவுக்கு கிடைக்குமளவுக்கு ஊடகக்கவனிப்பு இந்த அன்னையர்களுக்கு இல்லை. அவர்களில் நூறுக்குக்கும் மேற்பட்டவர்கள் நீதி கிடைக்காது என்ற அவநம்பிக்கையோடு இறந்துவிட்டார்கள். கடந்த வாரமும் ஒருவர் இறந்துவிட்டார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் இந்த அன்னையர்கள் சிலரைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பை ருவிற்றரில் படத்துடன் பதிவிட்டார். சில மேற்கு நாடுகளின் தூதரகங்கள் எப்போதாவது இந்த அன்னையர்களை சந்திக்கின்றன. ஆனால் அவர்களுடைய போராட்டம் பெருமளவுக்கு உலகத்தின் கவனக்குவிப்புக்கு வெளியேதான் காணப்படுகிறது.

அந்த அன்னையர்கள் மத்தியில் என்றைக்குமே காணப்படாத தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் சிலர் கோத்தா கோகமவில் காணப்பட்டார்கள். தங்களை சமூகப் போராளிகளாக, முற்போக்கானவர்களாக, லிபரல்களாக காட்டிக்கொள்ள விரும்பும் தரப்புக்கள் யாவும் தங்களுடைய பிரசன்னத்தை பதிவு செய்யும் ஓரிடமாக அது மாறியிருக்கிறது. ஆனால் தங்களுக்கு நீதி வேண்டும் என்று கேட்கும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் முழுமையாக நம்பிக்கை வைக்கத் தயாரற்ற ஓரிடமாக அது தொடர்ந்தும் காணப்படுகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்ப்புதினம்

○ இராகவன்

பஞ்சு மாமாவுக்கும் செல்வராணியக்காவுக்கும் கல்யாணம் முற்றான நிலையிலிருந்து வசந்தியக்கா வீட்டில் ஒரே ஆரவாரம். ஏனெண்டால் அதுதான் மாப்பிளை வீடு. கலியாண வீட்டுக்கு இரண்டு கிழமைக்கு முன்னமே வசந்தியக்கா வீட்டில ஏற்பாடுகள் தொடங்கிட்டுது. முதல் வேலை வளவை துப்புரவாக்கி ,வேலியடைக்கிறது. வசந்தியக்காவின்ர தகப்பன் சின்னத்தம்பியப்பு இந்த வேலையில வலு விண்ணன். அவரை நாங்கள் 'அப்பு 'எண்டு கூப்பிடுவம். அவருக்குக் காது, கை, கால், நெஞ்சு, முதுகெல்லாம் மசுக்குட்டியின்ர முதுகு மாதிரி ரோமம் அடர்ந்துபோயிருக்கும்.



அளவான உயரம். நல்ல திடகாத்திரமான மனிசன். அந்நதாள் காட்டுப்புலத்துக்குப் போய்,தன்னந்தனியாளாய் அலம்பல் வெட்டி, தலைச்சுமையாய்ச் சுமந்து கொண்டு வந்து போட்டுட்டு வேலியடைக்கத் தொடங்கிச்சுது. இதுக்குள்ளை நானும் இளையண்ணாவும் ஒருநாள் பின்னேரம் அப்புவோட காட்டுப்புலத்துக்கு அலம்பல் வெட்டுறதைப் புதினம் பாக்கப் போனனாங்கள். திரும்பிவர நல்லாப் பொழுதுபட்டுப் போச்சு. அம்மா என்னைக் காணேல்ல எண்டு தேடியிருக்கிறா. அவாவுக்கு நாங்கள் அப்புவோடை காட்டுப்புலத்துக்குப் போனது தெரியாது.

வசந்தியக்காதான் நாங்கள் அப்புவோடை போனதைச் சொல்லியிருக்கிறா. நாங்கள் திரும்பி வரேக்குள்ள அம்மா படலையடியில பூவசரம் கம்போட நிக்கிறதைக் கண்டிட்டு இளையண்ணா நைஸாக் கழண்டிட்டான். எனக்குச் சுத்தும் பித்தும் சுழறச் சுழற பூவரசம் கம்பால நல்ல வெளுவை விழுந்துது.

அப்புவை 'முடிச்சர் வீட்டுச் சின்னத்தம்பி' எண்டும் செல்லமாக அழைப்பினம். அப்புவுக்கு நேர மூத்தவர் சிதம்பரப்பிள்ளை எண்டு நேர் உச்சி பிரிச்சுத் தலையிழுப்பார். அதால அவரை ஊராக்கள் நேருச்சி எண்டுதான் கூப்பிடுவினம். அப்புவுக்கு நேர இளையவர் 'சேகரி' எண்டு. அந்தாள் கள்ளடிச்சிட்டுக் கொஞ்சம் முசுப்பாத்தி பண்ணும். எண்பத்தேழாமாண்டு ஊருக்குள்ள இலங்கை ஆமி வந்த மூட்டம். சேகரியர் தன்ர குடித்தோழர் செல்லையாவோட கள்ளடிச்சிட்டுச் சைக்கிளில கிராய்ப் பிள்ளையார் கோயில் பக்கம் டபிள்ல போயிருக்கிறார். ஆமிக்காரர் மறிச்சு "இதால போகேலாது. திரும்பிப் போங்க" எண்டு சொல்ல, சேகரியருக்கு உசார் ஏறியிட்டுது. 'மை சைக்கிள்! மை றோட்! மை பிறண்ட்! கூ ஆர் யூ?" (mycycle! my road! my friend! who are you?) எண்டு திரும்பத் திரும்பக் கேட்டிருக்கிறார். ஆமிக்காரர் சைக்கிளைத் தூக்கிப் பக்கத்திலயிருந்த வயற் கிணத்துக்கை போட்டுட்டாங்கள். எங்கடையாக்கள் ரண்டுபேருக்கும் கேந்தி கிளம்பியிட்டுது.

'சிங்கள வடுவாஸ்! மண்ணாங்கட்டி! எங்களோட பகிடி விடாமல் ஒழுங்கு மரியாதையாச் சைக்கிளை எடுத்துத் தாங்கோடா!"எண்டு சேகரியர் சாறத்தைச் சண்டிக் கட்டு கட்டிக் கொண்டு ஆமிக்காரருக்குக் கிட்டப் போக, பின்னால செல்லையரும் போயிருக்கிறார். 'அடோ பண்டி! பிரச்சினை வேண்டாம். திரும்பிப் போங்க! திரும்பிப் போங்க!' எண்டு ஆமிக்காரர் சொல்லியிருக்கிறாங்கள்.

'சைக்கிளப் பறிச்சுக் கண்டறியாத கிணத்துக்குள்ள போட்டுட்டு, திரும்பிப் போங்களெண்டு பேய் நியாயம் பறையிறியள். நாங்கள் என்ன கோத்தையின்ர சீலையிலயே போறது?" எண்டு செல்லையர் போதாக்குறைக்கு மிண்டியிருக்கிறார். "சிங்கள மோடையா! சைக்கிள எடுத்துத் தாறையாக் நாங்க திரும்பிப் போறயாக்!" எண்டு சேகரி சொல்லி வாய்மூடேல்ல இரண்டு பேருக்கும் நெஞ்சில 'படக் படக்' எண்டு ரவ்விரண்டு வெடி விழுந்திச்சுது.

(தொடரும்)

# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

**1886 மார்ச்**
குருநகர் பகுதியில் கடலுக்குள் மண் போடப்பட்டு றெக்கிளமேசன் என்ற பெயரில் புதிய குடியிருப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

**1886 ஏப்ரல்**
C.W.கதிரவேற்பிள்ளை, லண்டனில் நடைபெற்ற குடியேற்ற நாடுகளின் கண்காட்சியில் யாழ்ப்பாணத்திலிருந்த ஓலைச்சுவடி நூல்களை எடுத்துச்சென்று காட்சிப்படுத்தினார்.



**1887 மார்ச்**
உலோக நாணயங்களை தாளாக மாற்றுவதற்கு மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர். உலோக நாணயங்களை தாளாக மாற்றுவதற்கு பத்து வீதம் தரகுப்பணம் அறவிடப்பட்டது.

**1887 ஏப்ரல் 02**
சிலாவத்துறையில் முத்துக்குளிப்பு மேற்கொள்ளப்பட்டது. தினசரி 800 சுழியோடிகள் முத்துக்குளிப்பில் ஈடுபட்டனர். முத்துக்குளிப்பு மூலம் 396.095.57பவுண் வருமானம் கிடைத்தது.

**1887 ஏப்ரல் 12**
அரியாலை முதல் சாவகச்சேரி வரையான கடற்கரையில் , கடல்நீர் கிராமங்களின் உள்ளே புகுந்தது. இது சுமார் ஆறு நிமிடங்கள் நீடித்தது.

**1887 ஜூலை**
திருவாங்கூர் உயர்நீதிமன்ற நீதியரசராகப்பணியாற்றிய அரியநாயகம்பிள்ளை (பிரிட்டோவின் தந்தை) காலமானார். இவர் தனது பக்கச்சார்பற்ற தீர்ப்புகள் மூலம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

**1887 டிசம்பர்**
யாழ். இந்துக்கல்லூரி ஆரம்பம்
யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிய வில்லியம் நெவின்ஸ் சிதம்பரம் பிள்ளை 'Native Town School' என்ற பெயரில் பாடசாலையொன்றை ஆரம்பித்தார். 1889ம் ஆண்டு சட்டத்தரணி நாகலிங்கம் பாடசாலையைப்பொறுப்பேற்றார். 1890 ஆம் ஆண்டுசைவ பரிபாலன சபை பாடசாலையைப் பொறுப்பேற்றது. இந்தப்பாடசாலையே இப்போது யாழ். இந்துக்கல்லூரி என அழைக்கப்படுகிறது.

**1888 ஜனவரி 29**
வண்ணார்பண்ணை விக்ரோறியா படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டது.

**1888 மார்ச்**
மன்னாரில் முத்துக்குளிப்பு மூலம் 80.000 ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது.

**1888 ஜூன்**
கனகராயன்குளம் தொடர்பான ஆய்வறிக்கை பூரணப்படுத்தப்பட்டது.

**1888 ஜூன் 29**
யாழ். இந்துக்கல்லூரி அதிபர் நெவின்ஸ் சிதம்பரம்பிள்ளை, இந்திய தேசிய காங்கிரஸ் செயற்பாடுகள் பற்றி வண்ணார் பண்ணை விக்ரோறியா படிப்பகத்தில் உரையாற்றினார். மற்றும் சில யாழ்ப்பாணப் பிரமுகர்களும் இந்தக்கூட்டத்தில் உரையாற்றினர். (பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இந்திய அரசியல் இலங்கையிலும் செல்வாக்கு செலுத்தியது. இந்தியா விடுதலையடைந்தாலே இலங்கைக்கும் சுதந்திரம் கிடைக்கும் என அப்போது இலங்கையர்கள் அனைவரும் நம்பினர்)

**1888 ஓகஸ்ட்**
யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வில்லியம் துவைனத்தின் மூத்த மகன் மொயிர் சோமபீல்ட்ர துவைனம் ( William Moyir Somerfield Twynam)அமெரிக்காவுக்கான தொடர்பாளராக (Consular Agent)நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க நூல் நிலையம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் நிதி சேகரிப்பதற்காக தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான போர்த்தேங்காய் உடைக்கும் போட்டி நடத்தப்பட்டது.

**1888 நவம்பர்**
வடமராட்சி கிழக்கு, தென்மராட்சியிலிருந்து பிரிக்கப்பட்டு தனியான நிர்வாகப்பிரிவாக (மணியகாரர்பிரிவாக) பிரகடனப்படுத்தப்பட்டது. கரவெட்டியைச் சேர்ந்த வீரகத்தி முதலியார் வடமராட்சி கிழக்குக்கான முதலாவது முதலியராக நியமிக்கப்பட்டார்.

**1889 பெப்ரவரி 04**
யாழ்ப்பாணம் மருத்துவமனையில் பெண்களுக்கான விடுதி அமைப்பதற்கு நிதி சேகரிக்கும் நோக்குடன் கோட்டைப் பகுதியில் விநோத உடைப்போட்டி ஒன்று நடத்தப்பட்டது.

**1889 பெப்ரவரி 08**
Ceylon Patriot பத்திரிகை ஆசிரியரும் எழுத்தாளருமான சொலமன் ஜோன் பிள்ளை காலமானார்.

**1889 மார்ச் 18**
யாழ். மத்திய கல்லூரி தலைமை ஆசிரியர் வில்லியம் நெவின்ஸ் காலமானார். இந்தியாவிலும் இலங்கையிலும் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த இவர் சமஸ்கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். தமிழ் =ஆங்கில அகராதி ஒன்றையும் இவர் தொகுத்துள்ளார் எனினும் இந்த அகராதி தற்போது எங்குமில்லை.

**1889 ஏப்ரல்**
மன்னாரில் முத்துக்குளிப்பு மூலம் 479.975 ஸ்டேர்லிங் பவுண் வருமானம் கிடைத்தது. வாந்திபேதி தாக்கம் காரணமாக முத்துக்குளிப்பு இடைநிறுத்தப்பட்டது.

**1889 செப்ரெம்பர் 11**
சைவபரிபாலனசபையால் இந்து சாதனம் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. தமிழிலும் ஆங்கிலத்திலும் வாரமிருமுறை இந்து சாதனம் வெளிவந்தது. ஆங்கிலப்பதிப்பின் ஆசிரியராக திருவாங்கூர் நீதிபதியாக பணியாற்றிய செல்லப்பாபிள்ளை பணி புரிந்தார். தமிழ்ப்பதிப்பின் ஆசிரியராகவும் முகாமையாளராகவும் ஆறுமுகநாவலரின் மருமகனான கைலாசபிள்ளை சம்பளம் எதுவுமின்றிப் பணிபுரிந்தார்

**1890 செப்ரெம்பர் 13**
யாழ்ப்பாணத்துக்கு புகையிரத சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்கான குழு யாழ்ப்பாணம் வந்தது. இந்தக்குழுவில் சேர். பொன். இராமநாதனும் இடம்பெற்றிருந்தார்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org